முச்சந்தி முரளி



“இஞ்ச விலையள்
ஏறேக்க கடும் உசார்,
இறங்கேக்க தான்
கடும் பஞ்சிப்படும்”

Registered as a Newspaper

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 234

புதன்கிழமை
17 ஜூலை 2024

ஆடி 01 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை



கொக்குத்தொடுவாயில்

# மூடப்பட்டது புதைகுழி!

முல்லைத்தீவு, ஜூலை 17

கொக்குத்தொடுவாய் பகுதியில் அடையாளம் காணப்பட்டிருந்த மனிதப்புதைகுழியில் அகழ்வுப் பணிகள் முழுமையடைந்ததைத் தொடர்ந்து, அந்தப் புதைகுழி உரிய சட்ட நடவடிக்கைகள் மற்றும் அடையாளப்படுத்தல்களுக்கு அமைய நேற்றுடன் மூடப்பட்டது.

15

## விபத்தில் சிக்கி காயமடைந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17

விபத்தில் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நபர், சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.

12

## அதிபர்கள், ஆசிரியர்கள் மீண்டும் போராட முடிவு!

கொழும்பு, ஜூலை 17

ஊதிய முரண்பாடுகள் மற்றும் தமது இதர கோரிக்கைகளை நிவர்த்திக்குமாறு கோரி, அதிபர்களும் ஆசிரியர்களும் மீண்டும் தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

15

## காய்ச்சலால் முதியவர் பலி

யாழ்., ஜூலை 17

காய்ச்சல் காரணமாக, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த முதியவர் ஒருவர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.

12

## மருத்துவர் அர்ச்சுனாவுக்கு எதிராக ஐந்து வழக்குகள்

சாவ. மருத்துவமனைக்குள் நுழையவும் அவருக்குத் தடை

யாழ்ப்பாணம், ஜூலை 17

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் முன்னாள் பதில் மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராக சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் ஐந்து வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த வழக்குகள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இதன்போது அவர் மன்றில் முன்னிலையாகியிருந்தார்.

வழக்கு விசாரணைகளைத் தொடர்ந்து அவரை 75 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் விடுவித்த நீதிவான், மருத்துவமனைக்குச் செல்லவோ, நீதிமன்ற

12

ஒழுக்காற்று நடவடிக்கை

## 2 கிறிஸ்தவ மதகுருக்கள் பணியிலிருந்து நீக்கம்!

ஆயர் இல்லம் அதிரடி!

யாழ்ப்பாணம், ஜூலை 17

ஒழுக்காற்று நடவடிக்கையாக, கத்தோலிக்க மதகுருமார் இருவர் பணி நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் இல்லம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாண மறைமாவட்ட குருக்கள் மற்றும் துறவிகளுக்கான பணிப் பங்குகளின் மாற்றம் தொடர்பான அறிவித்தல், யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தால் அண்மையில் வெளியிடப்பட்டது. இதன்போதே இரண்டு

15

## அநுராதபுரத்தில் நிலநடுக்கம்

கொழும்பு, ஜூலை 17

அநுராதபுரத்தில் நேற்று மாலை இலேசான நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

12



மணல் கடத்தல்

## டிப்பர் மீது நேற்று பூநகரியில் சூடு!

ஒருவருக்குக் காயம்

கொழும்பு, ஜூலை 17

மணல் கடத்தலில் ஈடுபட்ட டிப்பரொன்று, பொலிஸார் மறித்தும் நிறுத்தாமல் சென்றதையடுத்து, துப்பாக்கிச்சூடு நடத்தி மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது.

12

## ஜூலை மாத இறுதிக்குள் தேர்தல் திகதி அறிவிப்பு!

கொழும்பு, ஜூலை 17

ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் திகதியை இம்மாத இறுதிக்குள் அறிவிக்கவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை முற்பகல் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

15

மின்கட்டணம் குறைப்பு எதிரொலி

## பொருட்கள், சேவைகளின் கட்டணத்தைக் குறைக்குக

அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 17

அதிகரித்துள்ள பொருட்கள் மற்றும் சேவைக் கட்டணங்களை, மின்சாரக் கட்டணத் திருத்தத்தின் ஊடாக 20 சதவீதத்தால் குறைக்க முடியும். மின் கட்டணம் அதிகரிக்கும் தினத்தன்று அதிகரிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் கட்டணத்தை, மின் கட்டணம் குறைக்கப்படும் அதே தினத்தில் இருந்து குறைக்க நடவடிக்கை எடுக்குமாறும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

15

## நல்லூர்த் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் துரித கதியில்

யாழ்ப்பாணம், ஜூலை 17

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் குரோதி வருட மஹோற்சவத் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளன.

திருவிழாவுக்கான ஏற்பாடுகள் தொடர்பான முதலாவது கலந்துரையாடல் மாநகரசபையின் ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன் தலைமையில், நல்லூர் சுகாதார மருத்துவ

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சங்கங்கள் புற்றுநோய் போன்றவை



## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 17**

**தொழிற்சங்கங்கள் புற்றுநோய் போன்றவை என பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-
தொழிற்சங்கங்கள் நிறுவன ஒருமைப்பாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. அவை புற்றுநோய் போன்றவை. அதேவேளை, கொல்லப்பட்ட குற்றவாளியொருவரின் படத்துடன் சுவரொட்டி ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு மஹரகம பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது- என்றார். (எ-இ)

# யாருக்கு ஆதரவு? தீர்மானமில்லை!

## ராஜித தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 17
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பது தொடர்பில் இதுவரையில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.
தற்போதைய ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் பொருளாதார வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவேண்டும்.
ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ராஜபக்சக்கள் ஆதரவு வழங்கும் பட்சத்தில் என்னால் ரணிலுக்கு ஆதரவு வழங்கமுடியாத நிலை ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# ஆழம் அறிந்து காலை விடுங்கள்

## பிரசன்ன அறிவுரை

கொழும்பு, ஜூலை 17
ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் முடிவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி எடுக்காவிட்டால் கட்சி இரண்டாகப் பிளவுபடும் என்று அந்தக் கட்சியின் உறுப்பினரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.
மொட்டுக் கட்சி தனி வேட்பாளர் ஒருவரை நிறுத்தினால்கூட ரணிலுக்கே நான் ஆதரவு வழங்குவேன். பெரும்பாலான உறுப்பினர்கள் ரணில் பக்கம் நிற்பார்கள். ரணிலை ஆதரிக்கும் முடிவை எடுக்காவிட்டால் கட்சி பிளவுபடும். நாமல் ராஜபக்ச சிறந்த அரசியல்வாதி. சஜித், அநுரவைவிட சிறந்தவர். எனினும், மொட்டுக் கட்சியை மக்கள் நிராகரித்துள்ளதால் தற்போதைய சூழ்நிலையில் அவர் களமிறங்கக்கூடாது. நாமல் களமிறங்கினாலும் மக்கள் வாக்களிக்கமாட்டார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# ராஜபக்சக்களுடன் நிஷாந்தவின் மனைவி!

கொழும்பு, ஜூலை 17
விபத்தில் உயிரிழந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மனைவி சமரி பிரியங்கா ராஜபக்ச தரப்புடன் இணைந்துகொள்ளவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கம்பஹா மாவட்ட உறுப்பினர் கோகிலா குணவர்த்தன தற்போது முழுவதுமாக ரணில் பக்கம் சாய்ந்துள்ளார். அதனால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்பும் நோக்கில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மனைவியை இணைத்துக்கொள்ள ராஜபக்ச தரப்பு தீர்மானித்துள்ளது. கடந்த 14ஆம் திகதி நாமல் ராஜபக்ச தலைமையில் திவுலப்பிட்டியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் சட்டத்தரணி சமரி பிரியங்கா பகிரங்கமாக ராஜபக்ச அணிக்குள் பிரவேசித்துள்ளார். (எ-இ)

# ஒலிம்பிக் தீபம் ஏந்திய தமிழர்

ஒலிம்பிக் தீபத்தை ஏந்திய ஈழத் தமிழர் என்ற பெருமையை பிரான்ஸின் வெதுப்பக உரிமையாளர் தர்ஷன் செல்வராஜா பெற்றுள்ளார்.
ஒலிம்பிக் தீபத்தை தர்ஷன் செல்வராஜா ஏந்தி 2.5 கிலோமீற்றர் ஓடியுள்ளார்.
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தர்ஷன், சிறந்த பாண் உற்பத்தியாளருக்கான விருதை பாரிஸில் கடந்த வருடம் பெற்றுக்கொண்டார்.
அத்துடன், பிரான்ஸ் ஜனாதிபதியின் வசிப்பிடமாகிய எலிஸே மாளிகைக்கு பாண் விநியோகம் செய்யும் உரிமையையும் இவர் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# 1700 ரூபா எங்கே?

கொழும்பு, ஜூலை 17
மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக 1700 ரூபா வழங்குமாறு வலியுறுத்தி பொகவந்தலாவை நகரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
இதன்போது பெருந்தோட்ட துரைமார் சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் ரொஷான் ராஜதுரையின் கொடும்பாவி எரிக்கப்பட்டது.
ஆர்ப்பாட்டத்தால் வீதியூடான போக்குவரத்துத் தடைப்பட்டதுடன் பொகவந்தலாவ நகர வர்த்தகர்களும் வர்த்தக நிலையங்களை மூடி ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு வழங்கினர். (ச-இ)

# கிளப் வசந்தவின் மனைவி கவலைக்கிடம்

கொழும்பு, ஜூலை 17
அதுருகிரியவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த கிளப் வசந்த என அழைக்கப்படும் சுரேந்திர வசந்த பெரேராவின் மனைவியின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
அவர் தற்போது களுபோவில மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் அவருக்கு பல சத்திரசிகிச்சைகளும் செய்யப்பட்டுள்ளன.
அதேவேளை காயமடைந்த பாடகர் கே. சுஜீவ பல சத்திரசிகிச்சைகளுக்குப் பிறகு தற்போது குணமடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# மர்மநபர் அனுப்பிய மலர்வளையம்

கொழும்பு, ஜூலை 17
அதுருகிரியில் அண்மையில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான பிரபல வர்த்தகர் கிளப் வசந்தவின் மனைவி மாணிக் விஜேவர்த்தனவுக்கு இனந்தெரியாத நபரொருவர் மலர் வளையம் ஒன்றை அனுப்பியுள்ளார். துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்து களுபோவில மருத்து வமனையில் சிகிச்சை பெற்றுவரும் நிலையில் இந்த மலர் வளையம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து மருத்துவமனையைச் சுற்றி பொலிஸார் குவிக்கப்பட்டு சிறப்புப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

# நீர்க்கட்டணம் மீளாய்வு

கொழும்பு, ஜூலை 17
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபையால் மீளாய்வு செய்வதற்கான கட்டணக் கொள்கை மற்றும் சூத்திரத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
2025 ஆம் ஆண்டு முதல் திருத்தப்பட்ட நீர்க்கட்டண கொள்கை மற்றும் நீர்க்கட்டண சூத்திரத்தை நடைமுறைப்படுத்துவதற்கே அனுமதிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வில்லையாயின் மீண்டும் போராட்டம்

*ரயில் நிலைய அதிபர் சங்கம் எச்சரிக்கை*

**கொழும்பு, ஜூலை 17**

**முன்வைக்கப்பட்ட 13 கோரிக்கைகளில் 6 கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக உறுதியளிக்கப்பட்டுள்ள நிலையில் இருநாள்களுக்குள் சாதகமான பதில் இன்றேல் தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று ரயில் நிலைய அதிபர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இணக்கம் தெரிவித்தபோதிலும் இதுவரை உரிய தீர்வு கிடைக்கப்பெறவில்லை. பதவி உயர்வு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து நிலைய அதிபர்கள் அண்மையில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதற்குரிய தீர்வு அமைச்சரவையில் முன்வைத்து வழங்கப்படும் என விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் உறுதிமொழிக் கமைய பணிப்புறக்கணிப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. உரிய தீர்வு கிடைக்காத பட்சத்தில் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் குதிக்க நேரிடும் என்றும் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்தார். (ச-இ)

## கல்வியியற் கல்லூரிகளில் இனி கல்விமாணிப் பட்டம்

கொழும்பு, ஜூலை 17

அடுத்த வருடம் முதல் 19 தேசிய கல்வியியற் கல்லூரிகள் பல்கலைக் கழகங்களாக மாற்றப்படவுள்ளதாக கல்வி இராஜங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார். இப்போது கல்வியியற் கல்லூரிகளில் டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

அடுத்த வருடம் முதல் இவை கல்விமாணி பட்டச்சான்றிதழ்களாக வழங்கப்படவுள்ளன.

இதன் மூலம் கல்வித்தரத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்த முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-25,6)

## கொத்து, ரைஸ் விலை குறைப்பு

கொழும்பு, ஜூலை 17

மின்சாரக் கட்டணம் குறைக் கப்பட்டதைத் தொடர்ந்து சில உணவுப் பொருள்களின் விலை குறைக் கப் படவுள்ளதாக அகில இலங்கை உணவகங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. அதன்படி சோறு, ப்ரைட்ரைஸ், கொத்து, தேநீர் ஆகியவற்றின் விலை 25 ரூபாவால் குறைக்கப்படும் என சங்கம் தெரிவித்துள்ளது. பரோட்டா, முட்டை ரொட்டி மற்றும் ஏனைய சிற்றுண் டிகள் 10 ரூபாவால் குறைக்கப்படும் என்றும் தேநீர் ஒன்றின் விலை 5 ரூபாவால் குறைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## காலி சிறைச்சாலையின் செயற்பாடு மட்டுப்பாடு

கொழும்பு, ஜூலை 17

காலி சிறைச்சாலையின் செயற்பாடுகளை இன்று முதல் மட்டுப்படுத்த சிறைச்சாலை திணைக்களம் தீர்மானித்துள்ளது.

மூளைக் காய்ச்சலால் கைதி ஒருவர் உயிரிழந்ததையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

காலி சிறைச்சாலையில் கைதி ஒருவர் கடந்த 13ஆம் திகதி உயிரிழந்துள்ளதுடன், பிரேத பரிசோதனையில் அவர் மூளைக் காய்ச்சலால் உயிரிழந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மூளைக் காய்ச்சல் இருப்பதாக சந்தேகிக்கப்படும் மேலும் மூன்று கைதிகள் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு காலி சிறைச்சாலையின் செயற்பாடுகளை ஒரு வாரத்துக்கு மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை மருத்துவமனை பணிப்பாளர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்துள்ளார். (ச-இ)



## மரபுரிமைச் சின்னங்களை பிரிட்டனிடமிருந்து மீட்போம்

இலங்கையிலிருந்து எடுத்துச்செல்லும் மரபுரிமைச்சின்னங்களை பிரிட்டன் அரசிடமிருந்து திரும்பப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம் என்று புத்தசாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்து அரசாங்கத்திடமிருந்து எமது மரபுரிமைச்சின்னங்களைத் திரும்பப் பெற்றது போல் பிரிட்டனிடமிருந்தும் மீட்போம் என்றும் அவர் குறிப்பிட்டார். ஒ-6)

## தேயிலை ஏற்றுமதியில் ஈரானின் கடன் அடைப்பு



கொழும்பு, ஜூலை 17

ஈரானுக்குச் செலுத்தவேண்டிய எண்ணெய்க்கான கடனில் இதுவரை 60 மில்லியன் அமெரிக்க டொலர் தேயிலை ஏற்றுமதியின் ஊடாகச் செலுத்தப்பட்டுள்ளது என்று இலங்கை தேசியசபை தெரிவித்துள்ளது.

கடன் கடந்த வருடம் முதல் செலுத்தப்பட்டு வருவதாக இலங்கை தேயிலைசபையின் தலைவர் நிராஜ் டி மெல் தெரிவித்துள்ளார்.

ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்தக் கடன் செலுத்தப்பட்டு வருகிறது.

அந்த உடன்படிக்கையின் கீழ், தேயிலை ஏற்றுமதியின் மூலம் கனியவளத்துறைக்காக ஈரானுக்குச் செலுத்தவேண்டிய 251 மில்லியன் அமெரிக்க டொலரை செலுத்த எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில், 4.1 மில்லியன் கிலோ தேயிலை ஈரானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## தினம் தெரியுமோ?

**சி**னிமாப் படங்களை விடவும் ஆரும் எதிர்பார்க்காத 'ருவிஸ்ற்றுகள்' சாவகச்சேரி ஆஸ்பத்திரி விசயத்தில நடந்து கொண்டிருக்குது. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்செண்டது இப்பவாவது டாக்குத்தர் அர்ச்சுனாவுக்கு விளங்கியிருக்கும். சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு முன்னால அண்டைக்கு இரவிரவா வந்து குவிஞ்ச சனங்கள், தனிய டாக்குத்தர் அர்ச்சுனாவுக்காக வரேலை. இவ்வளவு நாளும் அந்த ஆஸ்பத்திரிக்காரர், வருத்தமெண்டு போற சனத்தைப் படுத்தினபாட்டுக்கு எப்பவடா வெடிக்கலாம் எண்டு ஒரு தவிப்போட இருந்த சனங்களுக்கு, தங்கட பிரச்சினையை ஒரு டொக்டரா இருந்து கொண்டே வெளியில கொண்டு வாறதுக்கு ஒராள் வந்திட்டாரே எண்ட நினைப்பிலதான் அவ்வளவு பேரும் அண்டைக்கு வந்தவை. ஆனால் அப்பிடி வந்த சனம் முழுக்க, தனக்காகத்தான் வந்தவை எண்டு டாக்குத்தர் அர்ச்சுனா நினைச்சது தான் இப்ப அவரை நீதிமன்றத்தில கொண்டுபோய் நிப்பாட்டியிருக்கு.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில பொலிஸ் அரஸ்ட் பண்ண வந்த தில இருந்து, அடுத்தநாள் காலமை டாக்குத்தர் அர்ச்சுனா கொழும்புக்கு வெளிக்கிட்டுப் போகுமட்டும் எல்லாம் சரியாத்தான் நடந்தது. ஆனால் அதுக்குப் பிறகுதான் எல்லாமே தலைகீழா மாறத் தொடங் கிட்டுது. நுனலும் தன்வாயால கெடும் எண்டமாதிரி, டாக்குத்தர் அர்ச்சுனாவும் தன்ர பேஸ்புக் லைவ்வால கெடத்தொடங்கிட்டார். என்ன பேசுறம் எண்டதே விளங்காமல் கண்டபடி பேசிப்பேசியே, தன்னில இருந்த மதிப்பை தானே குறைக்க வைக்கிற வேலை யைச் ஆள் செய்யவெளிக்கிட்டார். அதோட எல்லா டாக்குத்தர்மாரோடையும் வில்லங்கத்துக்கு கொழுவல் எடுத்து, அதைபோஸ்ட்ரெக்கோர்ட்பண்ணி, யூரியூப்காரருக்கு போடக்குடுத்ததும் இன்னொரு பிழை.

கொழும்புக்கு அவர் போன இடைவெளிக்குள்ளையே எப்பிடியாவது அர்ச்சுனாவுக்கு ஆப்பு வைக்கிறதெண்டு, அவர் பேர் சொல்லி குற்றம் சாட்டின டாக்குத்தர்மார் முடிவெடுத்திட்டினம். அதோட என்னதான் இனி அர்ச்சுனா எங்களைக் கோபப்படுத்திற மாதிரி நடந்தாலும், அதுக்கு எந்த ரியாக்சனும் காட்டாமல் எல்லாத்தையும் சட்டப்படி சந்திக்கிறது எண்டதும் அவை எடுத்த இன்னொரு முடிவு. இதுகளொண்டும் தெரியாமல் பழையபடி அதேபாணியில, தனக்குப் பதிலா கடமையில இருந்த டாக்குத்தரை அர்ச்சுனா வெருட்டுறமாதிரி கதைக்க, அந்த டாக்குத்தரும் பம்மினவர். ஆனால் அவர் ஏன் பம்மினவர் எண்டதை நேற்று நீதிமன்றத்தில போட்ட வழக்கு காட்டிப்போட்டுது. கடமைக்கு இடையூறு செய்தவர் எண்டு அவர் அர்ச்சுனாவில கேஸ் போட்டிருக்கிறார். அவதூறு, ஆதாரமில்லாத குற்றச்சாட்டு, சமூகத்தில மதிப்புக்கு பங்கம் விளைவிச்சது எண்டு டாக்குத்தர் அர்ச்சுனாவுக்கு எதிரா அஞ்சு முறைப்பாடு செய்திருக்கினம். ஆனால் ஒண்டுக்கும் கிறுங்காமல் நிண்ட அர்ச்சுனா, இந்த கேஸ் விசயத்தில கிறுங்கித்தான் போட்டார். ஏனெண்டால் சாவகச்சேரியில பொலிஸ்காரர் அரஸ்ட் பண்ண வரேக்ககூட, சிரிச்சுக்கொண்டு பேஸ்புக்கில லைவ் விட்ட ஆள், நேற்று வழக்குக்குப் பிறகு முகத்தைச் சோகமா வைச்சுக்கொண்டு 'கேஸ் நடத்தக் காசில்லை, காரை விக்கப் போறன்' எண்டு புலம்பத் தொடங்கிட்டார். என்னதான் அர்ச்சுனா பேஸ்புக்கில அலம்பினாலும், அந்தாள் துணிஞ்சு கதைச்சதால தான் இப்பகன நல்ல விசயங்கள் ஆஸ்பத்திரியளில நடந்திருக்கு. அதை ஒருத்தரும் இல்லையெண்டு சொல்லவே ஏலாது கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை அமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 17

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் உடல், உள மேம்பாட்டுக்கான இலவச யோகக் கலைக் கற்கைநெறி நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நடத்தப்பட்டு வருகின்றது. இக் கற்கை நெறியின் ஒரு கட்டமாக கடந்த சனி மற்றும் ஞாயிறுக்கிழமைகளில் காலை 6.15 மணி முதல் யோகம் தரும் நல்வாழ்வு பற்றிய சிறப்புச் சிந்தனை அமர்வு இடம்பெற்றது.

யாழ்.மாவட்டப் பனை அபிவிருத்திச்சபையின் முகாமையாளர் ம.சுதாகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வவுனியாப் பல்கலைக்கழக வேந்தர் எஸ்.மோகனதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். ஓய்வுநிலை மருத்துவர் மருத்துவக் கலாநிதி. எஸ்.பாலசுப்பிரமணியம் வளவாளராகக் கலந்து கொண்டு சிறப்புக் கருத்துரை ஆற்றினார். (ஒ-66)



# நல்லூரில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஜூலை 17

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளரும், சமூகச் செயற்பாட்டாளருமான அமரர் சொக்கநாதன் யோகநாதனின் மூன்றாவது ஆண்டு நினைவாக மேற்படி நிறுவனத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றது. 27 பேர் ஆர்வத்துடன் கலந்துகொண்டு குருதிக்கொடை வழங்கினர். (ஒ-66)

# கொழும்புத்துறை ம.வி. வருடக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் 150 ஆவது வருட நிறைவு நிகழ்வு கொண்டாடப்படவுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு முதலாவது நிகழ்வாக நடைபவனி இடம்பெறவுள்ளது.

மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் நடைபவனியில் பங்கேற்கவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வாக எதிர்வரும் 26ஆம் திகதி 150 ஆவது ஆண்டு மலர் வெளியீடும் கலைநிகழ்வும் பரிசளிப்பு விழாவும் பாடசாலையின் தவத்திரு யோகர் சுவாமிகள் அரங்கில் நடைபெறவுள்ளன. (ச-17)





பட்டிமன்றப் பேச்சாளர்களான

# ராஜா, பாரதி பாஸ்கர் யாழ். வருகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூலை 17

அரியாலை சனசமூக நிலையத்தின் 75 ஆவது ஆண்டு பவள விழாவின் ஓரங்கமாக இடம்பெறும் மாபெரும் இலக்கிய விழாவில் கலந்து கொள்வதற்காகப் புகழ் பெற்ற தென்னிந்தியப் பட்டிமன்றப் பேச்சாளர்களான எஸ்.ராஜா, திருமதி பாரதி பாஸ்கர் ஆகிய இருவரும் நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் இவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு இடம்பெறும். நிகழ்வில் பாடசாலை சொற்சமர் விவாத அணிகளில் பங்கேற்போர் மற்றும் பட்டிமன்றங்களில் பங்கேற்போர் பயன்பெறும் வகையில் 'விவாத மேடையைக் கையாள்வது எப்படி?' எனும் தலைப்பில் இருவரும் கருத்துரைகளை வழங்குவர்.

இதேவேளை, அரியாலை சனசமூக நிலையத்தின் 75 ஆவது ஆண்டு பவள விழாவின் மாபெரும் இலக்கிய விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 6.30மணியளவில் அரியாலை சனசமூக நிலையத்தின் திறந்தவெளி அரங்கில் இடம்பெறவுள்ளது.

'வாழ்வில் எப்போதும் உறுதுணையாக இருப்பது நட்பே!! உறவே?' எனும் தலைப்பில் புகழ்பெற்ற பட்டிமன்றப் பேச்சாளர் எஸ்.ராஜா தலைமையில் திருமதி பாரதி பாஸ்கர் மற்றும் யாழ்ப்பாணப் பேச்சாளர்கள் பங்கேற்கும் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது. (ச-66)



# கல்லுண்டாயில் கழிவுகள் எரியூட்டல்

## பயணிகள் அசௌகரியம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

மாநகரசபையின் கீழ் காணப்படும் கழிவகற்றல் பகுதியில் கொட்டப்படும் கழிவுகள் கல்லுண்டாய் வெளியில் எரியூட்டப்படுவதனால் போக்குவரத்தில் சிரமங்களை எதிர்நோக்க நேரிடுகின்றது என்று பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கல்லுண்டாய் வெளியின் பிரதான வீதியால் பயணிக்கும் பொதுமக்கள் கழிவுகள் எரியூட்டப்படும் மாசுபட்ட காற்றை சுவாசிக்க வேண்டியுள்ளது.

யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்கு மற்றும் காரைநகர் வாழ் மக்களின் பிரதான போக்குவரத்து வழியாக இந்த வீதி காணப்படுகிறது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த எரியூட்டும் செயற்பாட்டைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்றும் பயணிகள் கோரிக்கை விடுத்தனர். (ச-125)

# தொழிற்சந்தை

யாழ்ப்பாணம், ஜூலை 17

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களமும், கோப்பாய்ப் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் பிரதேச தொழிற்சந்தை நிகழ்வு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் கோப்பாய்ப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-66)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சிகளை தொடங்கலாம். அம்பிகையை தியானித்து வழிபட காரியங்கள் சாதகமாக முடியும்.

**இடபம்:** மனதில் அவ்வப்போது குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். எதிர்பார்த்த காரியம் தாமதமாகும். குழப்பங்கள் ஏற்பட்டாலும், பாதிப்பு இருக்காது. வீண் செலவுகள் ஏற்படும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு ஆதாயம் கிடைக்கும். வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். இழுபறியாக இருந்த காரியம் அனுகூலமாக முடியும். மகிழ்ச்சி அதிகரிக்கும். உற்சாகம் கிடைக்கும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவுகளால் நன்மை உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். துணிச்சலுடன் முடிவெடுக்கும் திறன் அதிகரிக்கும். கடன் திரும்பக் கிடைக்கும். நற்பலன்கள் அதிகரிக்கும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்படும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும் காரியங்களை வெற்றிகரமாக முடித்துவிட முடியும். பணிச்சுமை அதிகரிக்கும்.

**கன்னி:** உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். லட்சுமி வழிபாடு நன்று.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொள்வார்கள். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். திடீர் செலவுகளால் கையிருப்பு கரையும். மகிழ்ச்சி ஏற்படும். மனவருத்தங்கள் நீங்கும். ஆஞ்சநேயரை தியானித்து வழிபட நற்பலன்கள் அதிகரிக்கும்.

**மகரம்:** செயல்களில் திட்டமிடுதல் மிகவும் அவசியம். தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**கும்பம்:** சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். நண்பர்கள் வகையில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். இடையூறுகள் விலகும். பொறுமை அவசியம். ஆஞ்சநேயரை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**மீனம்:** பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்துகொள்வது மகிழ்ச்சி தரும். மனவருத்தம் ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரியான திட்டமிடல்களால் வடக்கை வலுப்படுத்துவேன்

## எதிர்க்கட்சித் தலைவர் உறுதி



**மன்னார், ஜூலை 17**

**30 வருடகால போரின் சாபத்தால் அவல வாழ்வை முன்னெடுத்து வரும் வடக்கு மக்களின் எதிர்காலத்தை வலுப்படுத்துவதே ஐக்கிய மக்கள் சக்தியின் நோக்கமாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 317 ஆவது கட்டமாக மன்னார், தோட்டவெளி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சரியான திட்டமிடல் மற்றும் தொலைநோக்குப் பார்வை ஊடாக இலகுவாக கட்டியெழுப்பக்கூடிய மாவட்டமாக மன்னார் மாவட்டத்தை நான் பார்க்கின்றேன். மன்னாரின் எதிர்கால அபிவிருத்திக்காக தனியான ஜனாதிபதி செயலணியொன்று ஸ்தாபிக்கப்படும். அதன் ஊடாக ஐந்து பிரதேச செயலகத்திலும் 5 பெறுமதியான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பேன். மீன்பிடி, சுற்றுலா கைத்தொழில், விவசாயம், வர்த்தகம் போன்றவற்றைப் பலப்படுத்த நடவடிக்கை எடுப்பேன்.

நாட்டைக் கட்டியெழுப்பவேண்டும் என்ற நன்நோக்கில் நன்கொடையாளர்களால் எமக்கு வழங்கப்படும் நிதிப் பங்களிப்பிலேயே பிரபஞ்சம் திட்டத்தை முன்னெடுத்து வருகிறோம் - என்றார். (ச-25)

# பஸ் சேவை நடத்துங்கள்

## வன்னேரிக்குளம் மக்கள் கோரிக்கை

வன்னேரிக்குளம் - மன்னியாங்குளம் வழியாக கிளிநொச்சி மேற்குப் பகுதிக்கு பேருந்துச் சேவை நடத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என வன்னேரிக்குளம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மேற்குக்கான பேருந்துகள், வன்னேரிக்குளம் சோலை வழியாக ஜெயபுரம், முழங்காவில் வரை பயணிக்குமானால் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ள வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தை சூழவுள்ள மக்கள் பயனடைவார்கள். பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் கிளிநொச்சி நகரத்துக்கும் சென்று வரக்கூடியதாக இருக்கும்.

எனவே, மன்னியாங்குளம் வழியாக ஜெயபுரம் வரை கைவிடப்பட்ட நிலையில் உள்ள வீதிப் புனரமைப்பு பணிகளை நிறைவு செய்து பேருந்து சேவைகளை நடத்த கிளிநொச்சி மாவட்ட செயலர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர், (ச-25,13)



# மல்யுத்தப் போட்டி தங்கப்பதக்கங்கள் குவித்தது வித்தியானந்தா கல்லூரி

முல்லைத்தீவு, ஜூலை 17

மாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான மல்யுத்தப் போட்டியில் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி ஆண்கள் பிரிவு முதலாம் இடத்தையும், பெண்கள் பிரிவு 2 ஆம் இடத்தையும் பெற்றுள்ளது.

கல்லூரி சார்பாக பங்குகொண்ட எஸ்.மதீஸன், ஜே.கஜந்தன், ஜே.வினோஜன், பி.பிரியங்கன், ஏ.ரஜிந்தன் ஆகியோர் தங்கப்பதக்கங்களையும் எஸ்.கோதீஸன், வி.சுடர்நிலவன் வெள்ளிப்பதக்கங்களையும், கே.சானுஜா, கே.திலக்ஸனா ஆகியோர் தங்கப்பதக்கங்களையும் எஸ்.இசைமதி, வி.ஜனனி இரண்டு வெள்ளிப் பதக்கங்களையும் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். (ச-25- 13)

# பெருங்காய சவர்க்காரம் இலங்கையில் அறிமுகம்

ரஜரட்டை பல்கலைக்கழகம் பெருங்காயம் சேர்க்கப்பட்ட புதிய வகை சவர்க்காரம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

சந்தையில் உள்ள ஏனைய சவர்க்காரங்களை விட தரம் வாய்ந்ததாக இருக்கும் என்றும் இயற்கை பெருங்காயச் சாறுடன் இது தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தப் பல்கலைக்கழகத்தின் வணிக ஒருங்கிணைப்பு பகுதியினர் அறிவித்துள்ளனர். (ச-இ)



# குருநகர் சென்.றொக்ஸ் உதைபந்தில் வெற்றி

51 ஆவது காலால் படை இராணுவத்தினரும், உரும்பிராய் உதைபந்தாட்ட அக்கடமியினரும் இணைந்து வடமாகாண ரீதியாக நடத்திய, 14 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றில் குருநகர் சென்.றொக்ஸ் அக்கடமி அணி வாகை சூடியது.

குறித்த போட்டி உரும்பிராய் உதயசூரியன் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. உதைபந்தாட்ட இறுதிச்சுற்றில் குருநகர் சென்.றொக்ஸ் அக்கடமி அணிக்கு எதிராக கிளிநொச்சி ஈக்கிள் ஸ்டார் அக்கடமி அணி களமிறங்கியது. ஆட்டம் ஆரம்பித்து 8 ஆவது வினாடியில் குருநகர் சென்.றொக்ஸ் அக்கடமி அணி 1 கோலைப் பெற்றுக்கொண்டது.

இந்நிலையில் கிளிநொச்சி ஈக்கிள் ஸ்டார் அக்கடமி அணி, எதிரணியைத் தோற்கடிக்க முயன்று, போட்டியின் இடைவேளையின் பின்னர் களத்தில் இறங்கி 6 ஆவது நிமிடத்தில் முதலாவது கோலைப் போட இரண்டு அணியினரும் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலை வகித்த போது, சற்று நேரத்தில் குருநகர் சென்.றொக்ஸ் அக்கடமி அணி தனது இரண்டாவது கோலைப் போட்டு 1:2 என்ற கோல் கணக்கில் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

14 வயது பிரிவினருக்கான உதைபந்தாட்ட போட்டி ஆட்டத்தில் 20 கோல்களைப் போட்டு ஸ்டார் ஈக்கிள் அக்கடமி வீரர் யதுசன் ஆட்ட நாயகனாகவும் சிறந்த கோல் காப்பாளர் தொடராட்ட நாயகனாக சென்.றோக்ஸ் அக்கடமி வீரர் ஜெப்ரி மற்றும் உரும்பிராய் அகாடமி வீரர் ஜான்சன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். (ப-113-125)

# இலத்திரனியல் வகுப்பறை திறந்து வைத்தார் சஜித்

மன்னார், ஜூலை 17

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் பிரபஞ்சம் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக மன்னார் கருங்கண்டல் பாடசாலைக்கான இலத்திரனியல் மூல வகுப்பறை கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

மடு கல்வி வலயத்துக்குட்பட்ட கருங்கண்டல் பாடசாலையில் அமைக்கப்பட்ட இலத்திரனியல் மூல வகுப்பறை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டுக்காக கையளிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளின் நூலகங்களுக்குத் தேவையான ஒருதொகுதி ஆங்கில அகராதிகள் வழங்கப்பட்டதுடன், புதிய நூல்கள் கொள்வனவு செய்ய ஒரு இலட்சம் ரூபா நிதியும் சஜித் பிரேமதாஸவால் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-56)

# முருகானந்தா கல்லூரிக்கு விளையாட்டு உபகரணம்

கிளிநொச்சி, ஜூலை 17

கிளிநொச்சி முருகானந்தா கல்லூரி மாணவர்களின் விளையாட்டுத்துறை மேம்பாட்டுக்காக, 95 ஆயிரம் ரூபா பெறுமதியான கோல் கம்பங்கள், உதைபந்துகள் என்பவை கல்லூரியின் பழைய மாணவர்களால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அன்பளிப்பாக வழங்கிவைக்கப்பட்டன.

அத்துடன் உதைபந்து பயிற்றுநர் ஒருவரும் நியமிக்கப்பட்டு அவருக்கு ஊதியம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-25- 13)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெற்செய்கையில் மடிச்சுக்கட்டித் தாக்கம்

**முல்லைத்தீவு, ஜூலை 17**
**வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பிரிவிலுள்ள வயல் நிலங்களில் மடிச்சுக் கட்டித் தாக்கம் காணப்படுகின்றது என்று விவசாயிகள் தெரிவித் துள்ளனர்.**

அங்குள்ள நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
அவற்றில் மடிச்சுக்கட்டித் தாக்கம் அதிகமாகக் காணப் படுகின்றது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர். வழமையை விட கூடுதலான தடவை, வயலில் கிருமிநாசினி தெளிக்கவேண்டியுள்ளது என்றும் விவ சாயிகள் தெரிவிக்கின்றனர்.
(ப-13)



## வீதியோர மரக்கிளைகளை அகற்றுமாறு கோரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 17
கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் புனரமைக்கப்பட்ட வீதிக ளின் இரு மருங்கிலும் பற்றைகள், மரங்கள் வளர்ந்து போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளன என பொதுமக்களால் தெரிவிக்கப்படுகின்றது.
முல்லைத்தீவில் மாங்குளம் ஒட்டுசுட்டான் வீதி, நெடுங் கேணியில் இருந்து ஒதியமலை செல்லும் வீதி, மாங் குளத்தில் இருந்து மாந்தை கிழக்கு, துணுக்காய் பகு திகளுக்குச் செல்லும் வீதிகள், கிளிநொச்சியில் பூநக ரியில் இருந்து முழங்காவில் செல்லும் வீதி எனப் பல வீதிகளில் பற்றைகள் வளர்ந்திருப்பதால் விபத்துகள் ஏற்படுவதுடன் யானைகளால் மக்கள் தாக்கப்படுகின்ற சம்பவங்களும் அடிக்கடி நிகழ்கின்றன. வீதிகளுக்குப் பொறுப்பான திணைக்களங்கள், மரங்களை அழிக் காமல் இடையூறாக உள்ள கிளைகளையாவது அகற் றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். (ப-13)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 17
தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தினரால் வடமாகாணத்தில் கடமையாற்றுகின்ற இலங்கை அதிபர் சேவை வகுப்பு-2, மற்றும் வகுப்பு-3 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து பொருத்த மான பாடசாலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.
யாழ்.இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியால யம், யாழ்.மட்டுவில் தெற்கு அ.மி.த.க. ஆகிய 2 ஆம் வகை பாடசாலைகளுக்கு வகுப்பு -2 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களும், யாழ்.கரம்பை அ.மி.த.க. 3 ஆம் வகை பாடசாலைக்கு வகுப்பு -3 ஐச் சேர்ந்த உத்தியோகத்தரும் கோரப்பட்டுள்ளனர். விண்ணப்பிக்க விரும்புவோர் வலயக்கல்வி அலுவ லகத்தில் விண்ணப்பங்களை பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன் பாக வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி, ஹென்ஸ்மன் வீதி, சாவகச்சேரி எனும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். கடித உறையின் மேல் மூலையில் 'அதி பர் பதவிக்கான விண்ணப்பம்2024' எனக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பிப்பவர்கள் ஆகக் குறைந்தது 3 வருட காலம் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவர்களாக இருக்கவேண்டும்.
வகை-2 பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவை யில் வகுப்பு- 2 ஐ சேர்ந்தவர்களாகவிருத்தல். வகை -3 ஐ சேர்ந்த பாடசாலைக்கு வகுப்பு- 3 ஐ சேர்ந்த வர்களாகவிருத்தல், வகுப்பு -2 ஐ சேர்ந்த அதிபர்கள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் மட்டும் வகுப்பு-3 ஐ சேர்ந்தவர்கள் கருத்தில் கொள்ளப்படுவர். மாகா ணக் கல்வி அமைச்சின் அதிபர் வெற்றிடம் நிரப்புதல் சுற்றுநிருப இல. 2023 /3, 2023 /3A இற்கு அமைய தெரிவு மேற்கொள்ளப்படும் என அறிவிக் கப்பட்டுள்ளது. (ச-25)

## சமாதான நீதிவானாக சு. துரைராசசிங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 17
சாவகச்சேரி, கல்வயலைச் சேர்ந்த சுப்பிர மணியம் துரைராசசிங்கம் சாவ கச்சேரி மாவட்ட நீதிபதி ஏ.ஜூட்சன் முன்னி லையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.



ஓய்வு நிலை பொலிஸ் அலுவலராக க் கடமை யாற்றிய இவர் பெருங் குளம் பிள்ளையார் கோவில் பரிபாலனசபையில் உப தலைவராகவும், கல்வயல் பிரிவில் சமூக சேவைப் பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார். (ச-25-9)



## சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 17
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பணி யாற்றும் பரிசாரகர், சுகாதார உதவியாளர்கள் மற் றும் சாரதிகளுக்கான நூறு மணித்தியாலங்களைக் கொண்ட இரண்டாம் மொழி சிங்களப் பயிற்சி நெறி யின் இரண்டாம் பிரிவினருக்கான சான்றிதழ் வழங் கும் வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பா ணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது. (ஒ-66)



## குருநகரில் சீன அரிசி

யாழ்ப்பாணம், ஜூலை 17
யாழ்.குருநகர் கடற்றொழிலாளர் சங்கத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு சீன நாட்டின் அரிசி நேற்றுச் செவ்வாய்க்கிழமைபகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது. குறித்த அரிசி வழங்கும் நிகழ்வில் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வள மாவட்ட உதவிப் பணிப்பாளர் சுதாகரன், யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனப் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்துகொண்டனர். (ச-20)

## கிளி. கல்வி வலயத்துக்கு விரைவில் நிரந்தரகட்டடம்

கிளிநொச்சி, ஜூலை 17
கிளிநொச்சி வடக்கு கல்வி வலய அலுவலகத்துக்கு புதிய நிரந்தர கட்டடம் அமைக் கப்பட்டு வருவதாக கிளிநொச்சி வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் அ.சிவனருள் ராஜா தெரிவித்துள்ளார்.
இரு ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட கிளிநொச்சி வடக்கு கல்வி வலயம் தற்போது பரந்தன் இந்து மகா வித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்திலேயே இயங்கி வருகிறது. இந்த நிலையில் கிளிநொச்சி வடக்கு வலயத்துக்கான நிரந்தர இரு மாடி கொண்ட கட்டடம் பரந்தன் குமரபுரம் பகுதியில் அமைக்கப்பட்டுவருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-25,13)





தொல்புரம் உடையார்வளவு அருள் மிகு ஸ்ரீமஹாசக்தி அம்பாள் தேவஸ் தான மஹாகும்பாபிஷேகம் கடந்த வெள்ளிக்கிழமை கர்மாரம்பத்துடன் ஆரம்பமாகி நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை மஹா அபிஷேகத்துடன் நிறைவடைந்தது. (25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பேச்சுப்பல்லக்கில் வலம் வரும் ரணில்

புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள தமிழர்கள் இங்கு முதலிடுவதற்கு முன்வர வேண்டும் என்று தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார சில தினங்களுக்கு முன்னர் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார். கிளிநொச்சிக்கு நிகழ்வொன்றுக்கு வந்திருந்த அவர், 'புலம்பெயர்ந்தோரின் முதலீடுகளை மேற்கொள்ள அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. இலங்கையை வளர்ந்த நாடாக மாற்றி அடுத்த தலைமுறைக்கு பலன் கிடைக்கும் வகையில் செயற்பட வேண்டும்' என்று குறிப்பிட்டிருந்தார்.

புலம்பெயர்ந்து பிற நாடுகளில் உள்ள தமிழர்கள் இலங்கையை வளர்ந்த நாடாக மாற்றும் முயற்சியில் பங்கெடுக்கவேண்டும் என்ற விருப்பத்தைக் கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம், தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினை தொடர்பாக எவ்விதக் கரிசனையும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. இலங்கை நீடித்த வளர்ச்சியை எட்ட வேண்டுமானால் முதலில் செய்யவேண்டியது, பல தசாப்த காலமாக புகைத்துக் கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது மட்டுமே என்ற உண்மை நன்கு தெரிந்திருந்தும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதுவரை இதயசுத்தியுடன் அதற்கான எந்த முயற்சியையும் செய்திருக்கவில்லை.

தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள், பிரச்சினைகள் தீர்க்கப்படுமாக இருந்தால் எவரும் அழைக்காமலேயே புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழர்கள் இங்கு முதலீடுகளை மேற்கொள்வார்கள். ஆனால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்காமல், தமிழ் மக்களுக்கு மேலும் மேலும் நெருக்கடிகளை ஏற்படுத்திக் கொண்டு, நாட்டின் வளர்ச்சியில் பங்குதாரர்களாக ஆகுங்கள் என்று அவர்களை அழைப்பது எவ்வளவு பெரிய முரண்நகை. நாட்டின் வளர்ச்சியில் உண்மையாகவே அக்கறை கொண்டவராக ரணில் விக்கிரமசிங்க இருப்பாரானால் 'அவர் கூறுவது போன்று நாட்டுக்காகவே பதவிக்கு வந்திருந்தால் அவர் முதலில் செய்யவேண்டியது புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண வேண்டியதே. ஆகக்குறைந்தது இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நகர்வுகளையாவது அவர் மேற்கொள்ள வேண்டும். பேச்சு பல்லக்கு, தம்பி கால்நடை என்பது போன்றே ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகள் இருக்கின்றன.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை, பௌத்தமயமாக்கல், அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள் என்று நித்தமும் நெருக்கடிகளுக்குள் சிக்கியுள்ள தமிழ் மக்கள், மனதளவில் இந்தநாட்டில் இருந்து விலகியே இருக்கின்றனர். தாமும் இந்த நாட்டின் குடிமக்கள் என்று உணரக்கூடிய சூழலை உருவாக்காது' அவர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளைத் தீர்த்து வைக்காது நாட்டைக் கட்டியெழுப்பவேண்டிய நேரம் இதுவென்றும், இலங்கை அரசாங்கத்துடன் ஒன்றிணைந்து எமது நாட்டைக் கட்டியெழுப்ப வாருங்கள் என்றும் ரணில் அழைப்பதை என்னவென்று சொல்வது?





# சமூகப் பதற்றத்துக்கு நீதிமறுப்பே காரணம்

## நீதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 17

**சமூக நல்லிணக்கத்தையும் ஸ்திரத்தன்மையையும் பேணுவதில் நீதி மறுக்கப்படுவதால், அனைத்து மூலைகளிலிருந்தும் அமைதியின்மை தவிர்க்கமுடியாமல் பின்தொடர்கிறது-இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச சுட்டிக்காட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;
நீதி மறுக்கப்படுவதாலே அமைதியின்மை எதிர்பாராத வழிகளில் வெளிப்பட்டு, சமூகக் கொந்தளிப்புக்கு வழிவகுக்கிறது. சட்ட செயல்முறைகள் தடைப்படும் போது அல்லது நீதி தாமதமாகும் போது குழப்பம் ஏற்படலாம். இத்தகைய சீர்குலைவுகளைத் தடுக்க, சட்டத்தின் ஆட்சியை அசைக்காமல் நிலைநிறுத்தவேண்டும். அத்துடன் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் நீதி வெல்லவேண்டும்
மக்கள் நம்பிக்கைக்கு மாறாக லீ குவான் யூ மற்றும் மகாதீர் முகமது போன்ற தலைவர்கள் சிங்கப்பூர் மற்றும் மலேசியாவை தனித்தனியாக உருவாக்கவில்லை. மாறாக, குடிமக்களின் கூட்டு முயற்சிகளே முன்னேற்றத்துக்கும் செழுமைக்கும் வழிவகுத்தது - என்றார். (ச-இ)

# அடுக்குமாடிக் குடியிருப்பு உறுதிகள் கையளிப்பு

கொழும்பு, ஜூலை 17
கொழும்பில் அடுக்குமாடிக் குடியிருப்பில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் இரண்டரை இலட்சம் குடும்பங்களுக்கு அந்த வீடுகளின் முழு உரிமையையும் வழங்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 2024 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் உறுமய வேலைத்திட்டத்தின் கீழ் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.
முதற்கட்டமாக 50,000 கொழும்பு அடுக்குமாடிக் குடியிருப்பு உரிமையாளர்களுக்கு உரித்துரிமை உறுதிப்பத்திரங்கள் இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் வழங்கப்படவுள்ளன. (ச-இ)

# 10,615 பேருக்கு பொதுமன்னிப்பு

கொழும்பு, ஜூலை 17
குவைத்தில் விசா முடிந்த பின்னரும் சட்டவிரோதமாக தங்கியிருந்த 10 ஆயிரத்து 615 இலங்கையர்கள் பொதுமன்னிப்பின் அடிப்படையில் இலங்கைக்கு தற்காலிக கடவுச்சீட்டுடன் திருப்பி அனுப்பப்படவுள்ளனர்.
குவைத்திலுள்ள இலங்கை தூதரகம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. (ஒ-6)

# வளர்ச்சிப்போக்கில் விவசாய ஏற்றுமதி

கொழும்பு, ஜூலை 17
கடந்த இரண்டு வருடங்களுடன் ஒப்பிடும் போது, இந்த ஆண்டின் முதல் 6 மாதங்களில் விவசாய ஏற்றுமதித் துறையில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் பி.எல்.ஏ.ஜே. தர்ம கீர்த்தி தெரிவித்துள்ளார். விவசாய ஏற்றுமதி வருமானத்தின் பாதகமான நிலைமையைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட துரித நடவடிக்கைகளின் காரணமாக இந்த முன்னேற்றம் பதிவாகியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# படையினருக்கு காணி உறுதிகள்

கொழும்பு, ஜூலை 17
போரில் பாதிக்கப்பட்ட அவயவங்களை இழந்த மற்றும் தங்கி வாழும் இராணுவத்தினருக்கு காணி உறுதிகள் வழங்கும் நடமாடும் சேவை தற்போது முன்னெடுக்கப்படுகின்றது. ஜனாதிபதியின் கொள்கைத்திட்டத்துக்கமைய குருநாகல், சாலியபுரம், களுத்துறை பிரதேசங்களில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. முப்படை மற்றும் பொலிஸ் என்பவற்றில் கடமையாற்றி போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்கள் தற்போது வசித்து வரும் காணிகளை இலவசமாக வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,6)

## நாளை

18.07.2024

வியாழக்கிழமை - ஆடி - 02

சுபநேரம் : 07.30 - 09.00
ராகுகாலம் : 01.30 - 03.00

## நாளொரு நல்வார்த்தை

ஒரு மனிதன் மிருகத்தைக் கொன்றால் அது வீரம். மிருகம் ஒரு மனிதனைக் கொன்றால் அது பயங்கரம்.

- பெர்னாட்ஷா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதார அமைச்சர் யாழ்.வரும் வேளை

# அர்ச்சுனாவுக்கு காலக்கெடு விதித்து போராடத் தயாராகும் மருத்துவர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 17

சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகை தரும் நிலையில், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் முன்னாள் பதில் வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனா இன்று காலை 8 மணிக்கு முன்னதாக மருத்துவமனை விடுதியில் இருந்து வெளியேற்றப்படவேண்டும் என தெரிவித்த சாவகச்சேரி ஆதார மருத்துவமனை அரச மருத்துவ அதிகாரிகள் சங்க கிளையினர், இல்லையேல் இன்றுகாலை 8 மணி முதல் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் குதிப்போம் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனா பதவியேற்ற பின்னர் அங்கு கடமையாற்றிய அனைத்து மருத்துவர்களும் ஒருமித்த குரலில் மருத்துவமனையை விட்டு வெளியேறி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் ஏன் ஏற்பட்டது என்றும் காலக்கெடு இன்றி விடுதியில் இருந்து கடமையாற்றிய மருத்துவர்களை உடனடியாக வெளியேற்றும் சர்வாதிகார முறையைப் பிரயோகித்தது சரியா எனவும் நீங்கள் ஏன் சிந்திக்க மறந்தீர்கள் ?

ஒரு மருத்துவராக நோயாளிகளுக்குத் தேவையான பாதுகாப்பான சிகிச்சையை வழங்க முடியாமல் போகும் பட்சத்தில் தொடர்ந்து அங்கு பணியாற்றுவது என்பது முடியாத ஒன்று. நோயாளர்களது உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் அங்கு பணியாற்ற முடியாத நிலைக்கு மருத்துவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். அதே நேரம் உடனடியாக பணிப்புறக்கணிப்பையும் அவர்கள் மேற்கொள்ளவில்லை.

தான் கடமையேற்ற இரண்டு மணித்தியாலங்களில் மருத்துவர்கள் தங்கி இருந்த விடுதியை விட்டு வெளியேறுமாறு அவர் பணித்துள்ளார்.

மகப்பேற்று விடுமுறையில் இருந்தவர்கள் என்று கூடக் கருதாமல் மனிதாபிமானம் அற்ற முறையில் கட்டாய இடமாற்றத்துக்கு மருத்துவர்களை உள்ளாக்கியுள்ளார்.

மருத்துவர்களது மூடப்பட்டிருந்த விடுதிகளை உடைத்து தன்னகப்படுத்தியுள்ளார்.

இவரது அதிகார தோரணைகளையும் அட்டூழியங்களையும் தட்டிக் கேட்ட மருத்துவர்களை உளரீதியாகப் பாதிப்புக்கு ஆளாகும் படியான தகாத வார்த்தைப் பிரயோகங்களால் பேசியதுடன் தனது அதிகாரத்தை பயன்படுத்தி கட்டாய இடமாற்றங்களையும் வழங்கியுள்ளார். இதனால் மருத்துவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மருத்துவர்கள் மீது இவர் கொண்டிருந்த தனிப்பட்ட காழ்ப்புணர்வுகளே இவரது சர்வாதிகாரத்தனமான செயற்பாடுகளுக்குக் காரணமாகியுள்ளது. இவற்றை மேலதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி பொறுமை காத்து வந்தனர் சாவச்சேரி மருத்துவர்கள்.

அவசர சிகிச்சை பிரிவு மற்றும் மகப்பேற்றுப் பிரிவுகளை மின் பிறப்பாக்கி வசதியற்ற கட்டடத்துக்கு மாற்ற முற்பட்ட வேளையில் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட மின் பிறப்பாக்கி சுகாதார அமைச்சுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே பாதுகாப்பாக இக்கட்டடத்தை மீள ஆரம்பிப்போம். இல்லையெனில் அதற்கான மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்வோம் என மருத்துவ நிபுணர்கள் அறிவுரை கூறியபோதும் அவசர அவசரமாக தன்னிச்சையான முடிவுகளை எடுத்து இடமாற்றியுள்ளார்.

இரண்டாம் மாடிக்கு மாற்றப்பட்ட மகப்பேற்று விடுதிக்குப் பிரசவத்துக்கு வந்த கர்ப்பிணியை மின்தடை காரணமாக மேலெடுத்துச் செல்ல முடியாத நிலையில் சாதாரணமாக மேற்கொள்ள வேண்டிய பிரசவத்தையும் செய்ய முடியாத நிலையில் யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வழமையாக மேற்கொள்ளப்பட்டு வந்த பிரசவத்தையும் அங்கு நடத்த முடியாதவாறே இவர் பணியாற்றியுள்ளார். இவற்றையெல்லாம் ஏற்கனவே எதிர்வுகூறித்தான் மருத்துவ நிபுணர்கள் அவருக்கு தகுந்த அறிவுரைகளை வழங்கியிருந்தனர். இவரது பொறுப்பற்ற செயல்களால் பாதிக்கப்பட்டது பொதுமக்களே.

இதன் பின்பே மருத்துவர்கள் தங்களது பிராந்திய சுகாதார பணிப்பாளர் மற்றும் மாகாண சுகாதார பணிப்பாளரை அணுகினர். அவர்களும் அங்கு பயணத்தை மேற்கொண்டு வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவை மாகாணப் பணிமனைக்கு மாற்றலாகுமாறு பணித்து 24 மணி நேரம் நிறைவுற்றும் அதனை செயற்படுத்த முடியாமல் போனதால் தொழிற்சங்கமாகிய அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தமது உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் கடப்பாட்டுகுள்ளாக்கப்பட்டோம்.

நாம் நமது தொழிற்சங்க கூட்டத்தை நடத்துகின்ற இடத்தில் இவர் காணொலி எடுத்து எமது கூட்டத்தை குழப்பும் நோக்கத்தோடு செயற்பட்டதாலேயே இவரது கைபேசி தட்டிவிடப்பட்டு அருகிலிருந்த பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. மாறாக இவர் கூறுவது போன்று எவரும் அங்கு வன்முறையில் ஈடுபடவில்லை என்பதை தெரியப்படுத்துகின்றோம்.

மருத்துவர்கள் அவரை வெளியேற்ற நடவடிக்கை எடுப்பதை அறிந்து ஆதாரங்களற்ற பொய்யான குற்றச்சாட்டுகளை மேலதிகாரிகள் மீதும் மருத்துவ சமூகத்தின் மீதும் சுமத்தி மக்களை தன் வசப்படுத்தி தன்னை பாதுகாக்கும் நடவடிக்கைகளை இவர் நன்கு திட்டமிட்டு மேற்கொண்டு வருகின்றார். மருத்துவர்கள் மீது சுமத்தப்படுகின்ற ஆதாரமற்ற ஊழல் குற்றச்சாட்டுகள் அனைத்துமே இவரது கபட நாடகமே.

இவர் வன்முறைகள் நடந்ததாக கூறி பொதுசன ஊடகங்களை தவறான முறையில் பாவித்து தனக்கான ஆதரவைப் பெற்றுக் கொள்ள இவரால் கூறப்பட்டவை. இவரது கட்டுக்கதைகளும் கற்பனைகளுமே தவிர எந்தவித வன்முறைச் சம்பவங்களும் அன்று மருத்துவமனையில் நிகழவில்லை.

மருத்துவர்கள் அவருக்கு எதிரான முறைப்பாடுகளை முன்னெடுப்பதை அறிந்த மருத்துவர் அர்ச்சுனா, ஆதாரங்கள் அற்ற பிழையான சாத்தியமற்ற குற்றச்சாட்டுகளை தனது மேலதிகாரிகள் மீதும் மருத்துவர்கள் மீதும் சுமத்தி மக்களை திசை திருப்பி தன்னைப் பாதுகாத்துக்கொள்ள புத்திசாதுரியமாக முனைக்கின்றார். அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கமாகிய நாங்கள் நியாயமான திணைக்கள ரீதியான குற்றச்சாட்டுகளை விசாரணைக்குட்படுத்தி உண்மைகளை ஆராய்ந்து தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதை எப்போதும் மேற்கொண்டு வருவதோடு ஊக்கப்படுத்தியும் வருகின்றோம்.

மருத்துவர்களுக்குள் நடக்கும் உட்பூசல்களை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் தீய சக்திகள் மக்களை மருத்துவர்களுக்கு எதிராக திசை திருப்பி வசை பாடவைத்து தமது அரசியல் கபட நாடகங்களை அரங்கேற்றி வருகின்றனர்.

நிர்வாகியான இராமநாதன் அர்ச்சுனா ஏனைய மருத்துவர்களுக்கும் ஊழியர்களுக்கும் முன்னுதாரணமாக செயற்படுவதை விடுத்து நோயாளர்களது உணவைத் தான் உண்பது, வேலை நேரங்களில் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தல், தனது உயர் அதிகாரிகளின் கட்டளைகளை மீறுதல், மருத்துவமனை விடுதிகளை தன்னகப்படுத்தல், தனக்கு நியமிக்கப்பட்ட நியமனத்துக்குச் செல்லாமல் சாவகச்சேரி மருத்துவமனையின் சாதாரண செயற்பாடுகளுக்கு ஊறு விளைவித்து வருகிறார்.

தான் இதுவரை பெற்றுக் கொள்ளாத பட்டத்தை தனது அலுவலக முத்திரையாகவும், அலுவலக ஆவணங்களிலும் பயன்படுத்துவதென்பது சட்டப்படி குற்றமாகும். இவ்வாறு அரச சேவையில் உள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் செய்வாராயின் நாட்டின் நிலைமை என்னவாகும்?

அர்ச்சுனா இராமநாதன் மருத்துவமனை விடுதியை மீள ஒப்படைக்காமல் அங்கு தங்கியிருந்து மருத்துவமனைக்குள் வெளியாட்களை அழைப்பது, சமூக வலைத்தளப் பதிவுகளூடாக மக்களை மருத்துவர்களுக்கு எதிராக திசை திருப்ப முனைவது, போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது மருத்துவமனையில் கடமையில் இருக்கும் மருத்துவர்களும் விடுதியில் உள்ள மருத்துவர்களும் செயற்பாடுகளை நிறைவேற்ற முடியாது சிரமங்களை ஏற்படுத்துவதோடு பாதுகாப்பு அச்சுறுத்தல்களையும் ஏற்படுத்தி வருகின்றது.

இவ்விடயம் தொடர்பாக மத்திய மற்றும் மாகாண சுகாதார அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் இதுவரை எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாத காரணத்தால் நாம் மருத்துவமனை நடவடிக்கைகளை சுமுகமாக்குவதற்கும் மருத்துவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் தொழிற்சங்க நடவடிக்கைகள் மீண்டும் மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்–என்றுள்ளது. (ஒ–26)

## கிளப் வசந்த கொலை; நடுக்கடலில் விருந்து

கொழும்பு, ஜூலை 17

கிளப் வசந்தவின் இறுதி ஊர்வலமன்று பாதாள உலகக் குழுவின் தலைவர் எனக் கூறப்படும் கஞ்சிப்பானி இம்ரான் பிரான்ஸில் கடலின் நடுவில் படகில் விருந்து வைத்துக் கொண்டாடியதாகக் கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

இலங்கை நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்ட கஞ்சிபானி இம்ரான் பிரான்ஸுக்குத் தப்பிச் சென்று அந்நாட்டில் அரசியல் புகலிடம் கோரித் தலைமறைவாகியுள்ளார்.

இந்தநிலையில் தனது பிறந்தநாளை ஆழ்கடலில் படகில் வைத்து கொண்டாடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதாளக்குழுத் தலைமையில் நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்ததாகக் கூறப்படும் கிளப் வசந்தவின் இறுதிக்கிரியைகளும் அன்றைய தினமே கொண்டாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## பௌத்த மதத்துக்கு பெரும் அச்சுறுத்தலாம்

### கூறுகிறார் விதுர

கொழும்பு, ஜூலை 17

மதங்களிடையே பௌத்த மதமே பெரும் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கி வருவதாகப் பௌத்த சாசன மற்றும் கலாசார விவகார அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பௌத்த மதம் எதிர்நோக்கி வரும் அச்சுறுத்தல்களை தடுக்க விசேட செயற்றிட்டமொன்று உருவாக்கப்பட வேண்டும். நாட்டின் கலாசாரத்தைப் பாதுகாப்பதற்காக விசேட திட்டமொன்றைத் தயாரிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுவருகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இதற்கான முயற்சி மேற்கொண்ட போதிலும் பல்வேறு காரணிகளால் அது கைகூடவில்லை என்றும் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க குறிப்பிட்டுள்ளார். (ச–இ)

## சிறுவர்கள் நால்வர் மாயம்

கொழும்பு, ஜூலை 17

தலவாக்கலையைச் சேர்ந்த 4 சிறுவர்கள் காணாமற்போயுள்ளதாக தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சிறுவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை வீட்டிலிருந்து வெளியே சென்ற நிலையில் காணாமற்போயுள்ளனர். 15-16 வயதுடைய 3 சிறுமிகள் உட்பட 4 சிறுவர்களே இவ்வாறு காணாமற்போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச–இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை

17.07.2024
புதன்கிழமை

அதிகாலை
எழுந்துவிட்டாலே
தோல்விகள்
உங்களை விட்டு
தாமாக ஒதுங்கிவிடும்
- அப்துல் கலாம்

# இலங்கை எழுத்தாளர்களுக்கு வாய்ப்பு மட்டுப்படுகின்றது!



ச.தனுஷ்கா,
ஊடகத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

## எழுத்தாளர் வினிதா ஆதங்கம்

திருகோணமலை நகரைச் சேர்ந்த நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர் வினிதா உதயகுமார். இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பை 2023ஆம் ஆண்டு நிறைவு செய்ததுடன் இன்று உலகளாவிய தளத்தில் தனது ஆக்கபூர்வமான எழுத்தால் பல நாவல்களை தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டிருக்கும் 27 வயதுடைய இளம் எழுத்தாளராக இன்று தன்னை அடையாளப்படுத்தியுள்ளார். சுமார் 30க்கும் மேற்பட்ட நாவல்களை மூன்று ஆண்டுகளுக்குள் அவர் எழுதியுள்ளார். அதில் 16 நாவல்கள் இந்தியாவில் நூலாக வெளியிடப்பட்டுள்ளன. எழுத்துத் துறையில் தனக்கென புனைப் பெயரையும் வைத்துக்கொண்டு 'ஸ்ரீ வினிதா' என்ற பெயரில் தொடர்ந்து எழுத்துத் துறையில் பயணித்துக் கொண்டிருக்கிறார்.

இவரது ஆக்கங்கள் அழகிய தமிழ் மகள், பிரதிலிபி, ஏந்திழை, அமேசான் போன்ற தளங்களில் காணப்படுகின்றன. இலங்கை தொடங்கி உலகம் முழுவதும் தனது படைப்புகளை நிகழ்நிலைத் தளங்கள் ஊடாக வெளியிட்டுக் கொண்டிருக்கும் இளம் பெண் எழுத்தாளரான ஸ்ரீ வினிதாவுடனான நேர்காணல் இது.

**கே:** ஒரு பட்டதாரியாக ஆரம்பித்த பயணம் எழுத்தாளராக மாறியதன் காரணம் என்ன?

**ப:** தந்தையை இழந்த பின்னர் என் தாயாரின் தனிமையை போக்கிக் கொள்ள உதவிய வாசிப்புப் பழக்கம், என்னையும் கொஞ்சம் தழுவிக் கொண்டது. சாதாரண தரப் பரீட்சை எழுதியதன் பின்னர் எனது பொழுதுபோக்கு நேரங்களில் நாவல்களைத் தேடி வாசித்தேன். நான் முதன் முறையாக படித்த நாவல் 'அது ஒரு மழைக்காலம்'. அன்றிலிருந்து நாவல்களை வாசிப்பதில் தனி விருப்பம் எனக்கு ஏற்பட்டது. பல்கலைக்கழகங்களிலும் நிகழ்நிலைத் தளங்களிலும் ரமணிச் சந்திரனின் குடும்ப நாவல்களை தேடி வாசிப்பேன். எனது அனுபவத்தை சக நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வேன். அப்போதுதான் என்னை நாவல் எழுதுமாறு என் சக நண்பர்கள் ஊக்கப்படுத்தினர். வாசிப்பில் இருந்த ஆர்வமும் நீண்ட நாள்களாக நாவல்களை வாசிக்கும் பழக்கமும் என்னை நாவல்கள் எழுதுவதற்குத் தூண்டின. தமிழ்மொழியில் எனக்கிருந்த ஈடுபாடு என்னை மேலும் ஊக்கப்படுத்தியது. நாவல்கள் எழுதுவதில் சிரமங்கள் ஏற்படவில்லை.

**கே:** உங்கள் முதல் நாவலான 'வஞ்சம் ஏனோ வசீகரா' பற்றிய அனுபவங்களை பகிர்ந்து கொள்ள முடியுமா?

**ப:** இந்தியத் தளமொன்றில் நாவல்களுக்கான பிழைதிருத்தம் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அத்தளத்தின் உரிமையாளர் எனது திறமையைப் பார்த்து அவர்களது தளத்திலேயே எனது ஆக்கங்களை வெளியிடுவதற்கான வாய்ப்பை அளித்தார். நான் எதிர்பார்க்காத வரவேற்பை எனது முதல் நாவல் பெற்றுத்தந்தது. முதன் முறையாக நாவலைப் பதிவிடும்போது சிறு பதற்றம் எனக்குள் தோன்றியது. காரணம் இந்திய மொழிநடையை கையாள்வது சற்றுக் கடினமாக இருந்தது. இதனால் எனது முதலாவது நாவலில் ஆங்காங்கே இலங்கைத் தமிழையும் பயன்படுத்தியுள்ளேன். ஆனால் இன்று ஒன்றரை மாதத்தில் ஒரு நாவலை எழுதி முடிக்க முடிவதுடன், இந்திய மொழிநடையை என்னால் இலகுவாகவும் சிறப்பாகவும் கையாள முடிகின்றது.







**கே:** ஒரு எழுத்தாளராக நீங்கள் சாதித்த விடயம்?

**ப:** அமேசான் என்பது யாவரும் அறிந்த உலகளாவிய தளமாகும். இதில் பல்லாயிரக்கணக்கான நூல்கள் பல்வேறு மொழிகளில் பதிவிடப்படுகின்றன. அமேசான் தளத்தில் தமிழ் நூல்களில் மூன்று பிரிவுகளில் முதல் இடத்தை எனது நாவலான 'ஊதாப்பூ காதலி' பெற்றது. இதைத் தொடர்ந்து பல நாவல்கள் பெஸ்ட் செல்லராக அமேசான் தளத்தில் தொடர் வரவேற்பைப் பெற்று அதிக வாசகர்களை எனக்கு ஈட்டித் தந்தன. இது என் எழுத்திற்கு கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம்.

**கே:** தற்போது எழுத்துத் துறையில் உங்கள் இலக்கு என்ன?

**ப:** ஐந்து ஆண்டுகளில் 100 நாவல்களை எழுதி வெளியிடவேண்டும் என்பதே என்னுடைய தற்போதைய இலக்காகும். எழுத்து துறைக்கு வந்து மூன்று ஆண்டுகளில் நான் 32 நாவல்களை எழுதியுள்ளேன்.

**கே:** நீங்கள் ஆர்வம் காட்டும் வேறு துறைகள்?

**ப:** விரிவுரையாளர் பணியில் அதீத விருப்பமுள்ளது. தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில், இந்துநாகரிகம் கற்கையில் இளங்கலைமாணிப் பட்டம் பெற்றுள்ளேன். அத்துடன் முதல் வகுப்பு அங்கீகாரத்துடன் தங்கப் பதக்கம் பெற்று மூன்று மாத காலம் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றினேன். தற்போது முதுகலைமாணி கற்கையை தொடர்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றேன். ஒரு விரிவுரையாளர் ஆவதும் எனது இலக்காகும். எழுத்துத்துறை மற்றும் விரிவுரையாளர் பணி இரண்டையும் என்னால் சமமாக கொண்டு செல்ல முடியும் என்ற நம்பிக்கையுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடிப்பிறப்பன்று

## அத்தனையும்பெற கூடிப்பனங்கட்டி கூழும் குடிப்போம்



கே.எஸ்.சிவஞானராஜா

ஆடி பிறந்து விட்டால் நவாலியூர் சோமசுந்தரப்புலவரை இலங்கையர் அனைவரும் நன்றியோடு ஆடியும் பாடியும் தேடியும் போற்றி வணங்குவர். தேவர்களும் மனிதர்களும் ஆடிக் கூழுக்காக அத்தனையும் பெற்றுவிட, தவமிருந்து தேடியே நாடிவந்து கூடி மகிழ்வார். தித்திக்கும் ஆடிக் கூழதனில் தேனாகும் அமுதத்தினை வாயூற நாம் பாடி வரமாகக் குடிப்பதற்கு பொக்குவாய் தாத்தா, பாட்டியோடு கூடிமகிழும் பேறான திருநாளே ஆடிப்பிறப்பாகும்.

***ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை***
***ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே***
***கூழப்பனங்கட்டி கூழும் குடிக்கலாம்***
***கொழுக்கட்டையும் தின்னலாம் தோழர்களே***

தங்கத் தாத்தா என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்படும் சோமசுந்தரப்புலவரின் காலம் பொற்காலமாகும். 75 வருட பாரம்பரிய பண்பாடு கலாசார வாழ்வில் கோலோச்சியபோதும் இப்பூமி உள்ளவரை ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை என்றபாடல் உயிரோடும், பொறுப்போடும், அதே மெட்டோடும் நீண்டு ஒலிக்கும்.

தற்போதைய தலைமைகள், பாடசாலைகள், பொறுப்பானவர்கள், புலமையாளர்கள், தமிழ் அறிஞர்கள், மறைந்த மேதாவிகளை இந்த மண்ணுக்குப் பொறுப்பாக்காமல் நழுவி விடுவதனால் வீதியோரங்களில் நிறுத்தப்பட்ட சிலைகள் உயிர்பெற்றும் குருவிகளாலேயே பராமரிக்கப்படுகின்றன. பல தலைமைகள் மேடைகளில் வாலாயமாக விளம்பரமாவதால் எளிமைக்குத் திரும்ப முடியாமல் தவிக்கின்றனர். சோமசுந்தரப்புலவரின் தமிழ்த்தொண்டானது பாலர் பாடசாலைகளிலிருந்து ஊக்குவிக்கப்படவேண்டும். மேள, தாள மாலை மரியாதை எதுவுமின்றி ஞாலமதில் ஓடை, ஒழுங்கை, குடில், கொட்டில், தொழுவம், கிராமம், நகரம், ஆலயமண்டபங்கள், சிலைகள் தோறும் ஓங்கிஒலிக்க ஆவனபுரிய வேண்டும். ஆடிப்பிறப்பு என்ற பாடலில் வருகின்ற சொற்கட்டுக்கும், எதுகை மோனைக்கும் ஓசை நயத்துக்கும், பொருட் செறிவுக்கும் கூழ் செய்யும் முறைமைக்கும் பாடலிலே வரும் கூழ் இனிமைக்கும் நிகராக இதுவரை எந்தப்பாடலும் எவராலும் எழுதப்படவில்லை.

***வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே***
***வேலூரிற் சர்க்கரையும் கலந்து***
***தோண்டியில் நீர்விட்டு மாவையதிற் கொட்டிச்***
***சுற்றிக் குழைத்துத் திரட்டிக்கொண்டு***

***வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி***
***வெல்லக் கலவையை உளேயிட்டுப்***
***பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே***
***பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே***



***பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி***
***போட்டுமா வுண்டை பயறுமிட்டு***
***மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவாள்***
***மணக்க மணக்க வாயூறிடுமே***

ஆமாம்!

தேவர்களும், பிதிர்களும், மக்களும், பிராணிகளும், மூலாதார மூர்த்திகளும் ஏக காலத்தில் ஆடிப்பிறப்பன்று பூமிக்கு வருகின்ற அதிசயம் அனுபவ பூர்வமாக அனுபவித்து ஆனந்தம் பெறக்கூடிய தொன்றாகும்.

குங்குமப் பொட்டிட்டு பூமாலை சூடியே
குத்துவிளக்குக் கொளுத்தி வைத்து
அங்கிள நீர்பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப்படைப்பும் படைப்போமே.

குடும்பங்களை ஒற்றுமையாக்கவல்ல ஆடிக்கூழின் பேறுதனில் மகிழ்வோமாக.

# இலங்கை எழுத்தாளர்களுக்கு வாய்ப்பு மட்டுப்படுகின்றது!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**கே: எழுத்துத் துறையில் நீங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன?**

**ப:** எழுத்துத் துறையில் இடைவிடாது பயணித்தல் மிக அவசியமாகும். ஏனெனில் போட்டியாளர்கள் நம்மை முந்திச் செல்லக்கூடும். வாசகர்களுக்கும் அவர்களது எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் வகையில் நான் நாவலை எழுதவேண்டும். வாசகர் வட்டத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக முழு முயற்சியுடன் செயலாற்ற வேண்டும். இதனால் எனது அன்புக்குரியவர்களுடன் குடும்பத்தாருடன் என்னால் நேரத்தை அதிகம் செலவழிக்க முடியாதுள்ளது. இதனால் எனது அன்புக்குரியவர்களுடன் கருத்து வேறுபாடுகள் வருவதுண்டு. நாவலை எழுதி முடிப்பதிலேயே கருத்தாய் இருப்பேன். இப்போது எழுத்துப் பணிக்கும் குடும்பத்துக்கும் நேரம் ஒதுக்குவதற்கு கற்றுக் கொண்டேன். மிக முக்கியமான பிரச்சினையாக இலங்கை எழுத்தாளர்களது படைப்புகளை அமேசான் தளத்தில் சுயாதீனமாக வெளியிட முடியாதுள்ளது. காரணம், இலங்கை கணக்கை அமேசான் ஏற்றுக்கொள்வதில்லை. எமக்குத் தெரிந்தவர்கள் வேறு நாட்டில் இருப்பார்களாயின்அவர்களின் உதவியுடன் வெளிநாட்டு வங்கிக் கணக்கின் ஊடாக நூல்களை பதிவிட முடியும். இது இலங்கை எழுத்தாளர்களுக்கு பெரும் தடையாகும். இதனால் இலங்கை எழுத்தாளர்களுக்கான வாய்ப்பானது குறுகிய வட்டத்துக்குள்ளேயே முடக்கப்படுகிறது.

**கே: எழுத்துத் துறையில் உள்ள வாய்ப்புகள் பற்றி கூறுங்கள்?**

**ப:** இன்றைய சூழ்நிலையில் வருமானம் என்பது மிக முக்கியமான விடயமாகும். சாதாரணமாக 70 ஆயிரம் ரூபாவிற்கு அதிகமாகவே இத்துறையில் உழைக்கலாம். இதற்கு முழுமையான ஈடுபாடும் அர்ப்பணிப்பும் அவசியமாகும். ஒரு நாவலுக்கு நான் எந்தளவு ஈடுபாட்டுடன் செயற்படுகிறேன் என்பதைப் பொறுத்து நாவலுக்கான வருமானம் கிடைக்கும். எத்தனை வாசகர்கள்,பார்வையாளர்கள் எனது நாவலைப் பெறுகிறார்களோ,அதன் அடிப்படையில் நாவலுக்கான பெறுமதி மற்றும் வருமானம் கிடைக்கும். மேலும் ஆடியோ நாவல்கள் மூலமும் வருமானம் பெறலாம்.தமிழ்மொழியில் மாத்திரம் ஆக்கங்களை வெளியிடாது,சர்வதேச மொழியான ஆங்கிலமொழியில் வெளியிடுவதன் மூலம் வருமானத்தை அதிகரிக்கலாம்.அந்தவகையில் எதிர்காலத்தில் எனது நாவல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்புச் செய்து வெளியிடுவதற்கான எண்ணமுள்ளது.

**கே: உங்கள் நாவல்களில் ஈழம் சார்ந்த போர் அனுபவங்கள் காணப்படாமைக்கான காரணம்?**

**ப:** உலகளாவிய தளங்களில் வெளியிடும் நோக்கில் ஒரு நாவலை எழுதும்போது அனைவருக்கும் பொதுவான மொழி நடை, பொதுவான கருத்துகளை உள்வாங்கி அமைதல் மிக அவசியமாகும். அந்த வகையில் இலங்கையர்களது மொழி நடை அனைவராலும் இலகுவில் புரிந்து கொள்ளமுடியாது. இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் குறித்து நாவல் எழுதவேண்டும் என்பது எனது நீண்ட நாள் ஆசை. இருப்பினும் சில நாடுகளில் உள்ள தணிக்கை சார்ந்த விடயங்களாலும் கட்டுப்பாடுகளாலும் போர் அனுபவம் குறித்து வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் என்னால் எழுத முடியவில்லை. எனது நூல் உலகளாவிய தளங்களில் பதிவேற்றப்படுவதால் சில கட்டுப்பாடுகள் இதில் தாக்கம் செலுத்துகிறது. இருப்பினும் எதிர்காலத்தில் எமது போர் சார்ந்த அனுபவங்களை கொண்ட நாவலை எழுதத் திட்டமிட்டுள்ளேன்.

**கே: எழுத்துத் துறையில் கடந்த 3 ஆண்டுகள் பயணம் பற்றி கூறுங்கள்?**

**ப:** எனது இரண்டு வயதிலேயே என் தந்தையை இழந்தேன். தந்தையை இழந்த என் குடும்பத்துக்கு வருமான ரீதியாக பல சவால்கள் ஏற்பட்டன. ஒரு தந்தை இருந்திருந்தால் குடும்பத்துக்கு எவ்வாறு பக்கபலமாக இருப்பாரோ, அந்த ஆறுதலையும் மன தைரியத்தையும் அனைத்து வகையிலும் எழுத்துத் துறை எனக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது. என் குடும்பத்துக்கு வருமானம் கிடைப்பதற்கு ஒரு வகையில் இந்த எழுத்துத் துறையும் காரணமாகும். வருமானத்தை கடந்து எனது தனிப்பட்ட திறனை வளர்ப்பதற்கும் நான் யார் என்பதை அடையாளப்படுத்துவதற்கும் பக்க பலமாக இருந்தது எழுத்துத்துறையாகும். இன்று இந்தியாவில் பலருக்கு என் நாவல்கள் பற்றித் தெரியும், மிர்ச்சி எப்.எம். முதல் ஏந்திழை, அமேசான் தளம் போன்றவற்றில் தொடர்ந்து நாவல்களை வெளியிட்டு வருகிறேன். இந்தியாவில் 16க்கும் மேற்பட்ட நாவல்களை புத்தகமாக வெளியிட்டுள்ளேன். பல்கலைக்கழகப் பட்டதாரி என்னும் அடையாளத்துக்கு அப்பால் என்னை ஒரு எழுத்தாளராக இந்த உலகுக்கு அறிமுகப்படுத்தியது இந்த எழுத்து துறையாகும்.

**கே: உங்கள் எழுத்து நடை வேறுபட்டு இருப்பதற்கான காரணம் என்ன?**

**ப:** ஒவ்வொரு நாவலும் வித்தியாசமாக இருக்கவேண்டும் என எண்ணுவேன். ஒரே கருவையும், ஒரே பாணியில் தொடர்ந்து எழுதுவதில் எனக்கு ஈடுபாடு இல்லை. எனவே ஓர் எழுத்தாளராக அனைத்து விடயங்களையும் உள்வாங்குதல், புதிய விடயங்களை கற்றுக்கொள்ள தினமும் முயற்சிப்பேன். இதனாலேயே எனது ஆக்கங்களில் திகில், நகைச்சுவை, குற்றங்கள் மற்றும் த்ரில்லிங், காதல், பெண்ணியம் என பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**கே: உங்களைப் போன்று சாதிக்க விரும்பும் பெண்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

**ப:** பெண்கள் சுதந்திரமாகவும், பிறரில் தங்கி வாழாது பழகிக்கொள்ளவேண்டும். இன்றைய சூழலில் வருமான ரீதியாக ஒவ்வொரு பெண்களும் தம்மை வலுப்படுத்திக் கொள்வது மிக அவசியமாகும். வீட்டிலுள்ள பெண்களுக்கு சாதிக்கும் வாய்ப்புகள் மிக அதிகமாகவே காணப்படுகின்றன. முதலீடு இன்றி தமது தனிப்பட்ட திறனையும் வாசிப்பு பழக்கத்தையும் திறம்பட செய்வதன் மூலம் தாமும் ஆக்கங்களை வெளியிடலாம். குடும்ப கஷ்டங்களால் முடங்கியுள்ளவர்கள், கல்வியை இடை நிறுத்தியவர்கள் என ஒவ்வொரு பெண்களுக்குள்ளும் ஓர் எழுத்தாளரோ தனிப்பட்ட திறனோ நிச்சயமாக இருக்கும். பெண்கள் அதனை சரியாக இனங்கண்டால் வாழ்வில் தலை நிமிர்ந்து வெற்றி நடை போடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெறிபிறழும் மாணவர்கள்

சி.நற்குணலிங்கம்



எந்தக் குழந்தையும் மண்ணில் பிறக்கையில் நல்ல குழந்தைதான். அது நல்லவனாவதும், தீயவனாவதும் அந்தக் குழந்தையின் குடும்பச் சூழலில்தான் தங்கியுள்ளது. வலுவான குடும்பச் சூழலில் வளரும் குழந்தை சமுதாயத்தில் மிகச் சிறந்த பிரஜையாக உருவாகும். நாம் வாழும் வீடே அறிவு வளர்ச்சிக்கும், ஒழுக்கத்துக்கும் தளமாக அமைகிறது. வீட்டுச் சூழலானது பிள்ளை தடையின்றி தன் கல்வியை முன்னெடுத்துச் செல்லக் கூடியதாக இருக்கவேண்டும்.

**அவதானம் அவசியம்**

பிள்ளையின் கல்விக் காலத்தில் எந்தச் சந்தர்ப்பத்திலும் பெற்றோரின் பிடி, கவனம், உற்று நோக்கல், பிள்ளைமீதான மதிப்பீடு, அவதானிப்பு என்பவை தளரக்கூடாது. ஆனால் பெரும்பாலான குடும்பங்களில் இன்று அந்த நிலை தளர்ந்துள்ளது. கற்றலில் ஈடுபாடு குறைவாகவுள்ள பிள்ளைகள் பெற்றோரின் பலவீனங்களை அறிந்துகொண்டு, அந்தப் பலவீனங்களை தந்திரமாகப் பயன்படுத்தி கல்விக்கான இளமைப் பருவத்தை தொலைத்து விடுகிறார்கள். குழந்தைகளை எப்போதுமே குழந்தைகளாக எண்ணாது, அவர்களின் வயதுக்கு ஏற்ப பெற்றோர் தம் அவதானிப்பிலும் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வதில்லை. மாணவப் பருவத்திலேயே பலவகையான மனவெழுச்சிப் போராட்டங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்கு பிள்ளைகள் தள்ளப்படுகிறார்கள். அவர்களது கற்கும் நேரம் வீணடிக்கப்படுகிறது. பெற்றோரின் கண்காணிப்பும், ஒழுங்கான வழிகாட்டலும் கிடைக்காது போவதால் பிள்ளைகள் தமக்கு விரும்பியவாறு நடந்து கொள்ள தொடங்குகிறார்கள்.

'வெள்ளம் வரும்முன்னெ அணைகட்ட வேண்டும்' பிள்ளைகளின் விடயத்தில் பெற்றோர் விழிப்புடன் செயற்படாவிட்டால் அந்தோ கதிதான். பாடசாலைகளில் பல்வேறு குணவியல்புகளுடைய மாணவர்கள் உள்ளனர். நன்றாகக் கற்போர், பாடசாலை சட்ட திட்டங்களுக்கு மதிப்பளிப்போர், காலதாமதமாக வருவோர், வரவு குறைவோர், கற்றலில் உற்சாகம் இழந்து நிற்போர், கற்றல் தொழிற்பாட்டில் ஒதுங்கி நிற்போர், கவனக் குறைவு, நெருக்கீட்டுக்கு உட்பட்டவர்கள், மெல்லக் கற்போர் என பலதரப்பட்டோர் உள்ளனர். இவர்களுக்கு கல்வியில் நாட்டம் மிகக் குறைவாகவே இருக்கும்.

**யாழ். மாணவர்களின் கற்றல் முறைகள்**

யாழ்ப்பாணம் பாடசாலைகளில் கல்வி கற்கும் உயர்தர மாணவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலிருந்து தெரிய வந்த விடயங்களாவன,

35 வீதமான மாணவர்கள் நண்பர்களுடன் சேர்ந்து கற்பதை விரும்புகின்றனர். 17 வீதமான மாணவர்கள் அதிகாலையில் எழுந்து கற்கின்றனர். 33 வீதமான மாணவர்கள் நேர அட்டவணையைத் தயாரித்தும், 66 வீதமான மாணவர்கள் நேர அட்டவணையின்றி எழுந்தமானமாகவும் கற்கின்றனர். 20 வீதமானோர் கிழமையில் 4 நாள்களும், 5 வீதமானவர்கள் பரீட்சைக்கு முதலும் கற்கின்றனர். 30 வீதமான மாணவர்கள் 2 மணித்தியாலங்களை சுயமாகக் கற்க செலவு செய்கின்றனர். மாணவர்கள் தொடர்ச்சியாக கற்கும் நேரத்தினை ஆராய்ந்த போது, 30 வீதமானோர் ஒரு மணித்தியாலத்துக்குள்ளும், 42 வீதமானோர் 2 மணித்தியாலத்துக்குள்ளும், 6 வீதமானோர் 3 மணித்தியாலத்துக்குள்ளும் தொடர்ச்சியாகக் கற்கின்றனர்.

கல்வி கற்கும் முறையை ஆராய்ந்தபோது, ஒவ்வொரு பாடத்தினையும் முதலில் இருந்து கடைசிவரை ஒழுங்காகக் கற்பவர்கள் 40 வீதமாகவும், கேள்விக்கு ஏற்ப பாடத்தைப் படிப்பவர்கள் 23 வீதமாகவும், எழுந்தமானமாக கற்பவர்கள் 23 வீதமாகவும் ஆகவும் காணப்பட்டனர். கிரகிக்கும் தன்மையை அதிகரிக்க மனதில் நினைத்து 20 வீதமானவர்களும், எழுதி 15 வீதமானோரும், நண்பர்களுடன் கலந்துரையாடி 15 வீதமானோரும் மீட்டலை மேற்கொள்கின்றனர். இந்தத் தரவுகளிலிருந்து கற்கும் பிள்ளைகள் கற்றல் தொடர்பாக பெற்றோரை மட்டுமன்றி தம்மையும் ஏமாற்றியுள்ளனர், ஏமாற்றுகிறார்கள் என்பதை புரிந்து கொள்ளமுடிகிறது.

> பிள்ளையின் கல்விக் காலத்தில் எந்தச் சந்தர்ப்பத்திலும் பெற்றோரின் பிடி, கவனம், உற்று நோக்கல், பிள்ளைமீதான மதிப்பீடு, அவதானிப்பு என்பவை தளரக்கூடாது. ஆனால் பெரும்பாலான குடும்பங்களில் இன்று அந்த நிலை தளர்ந்துள்ளது. கற்றலில் ஈடுபாடு குறைவாகவுள்ள பிள்ளைகள் பெற்றோரின் பலவீனங்களை அறிந்து கொண்டு, அந்தப் பலவீனங்களைப் தந்திரமாகப் பயன்படுத்தி கல்விக்கான இளமைப் பருவத்தை தொலைத்து விடுகிறார்கள்.



**நெறிபிறழும் மாணவர்கள்**

கல்வியில் உள்ள ஆர்வத்தைவிட சமூக வலைத்தளங்களைப் பார்வையிடுவது, இணைய விளையாட்டுகளில் ஈடுபடுவது, தொலைக்காட்சி பார்ப்பது, கதைப்புத்தகம் வாசிப்பது போன்றவற்றில் மாணவர்கள் ஆர்வம் செலுத்துகின்றனர். புத்தகத்துக்குள் கைத்தொலைபேசி, கதைப்புத்தகம் போன்றவற்றை மறைத்து வைத்துப் பார்க்கின்றனர். பாடசாலைக்கு, தனியார் கல்வி நிலையத்துக்கு செல்வதாகக் கூறிவிட்டு நண்பர்களுடன் திரையரங்குகள், பூங்காக்களுக்கு செல்கின்றனர். புகைத்தல், மது அருந்துதல், சிறு வயதுக் காதல் போன்ற பிறழ்வான நடத்தைகளில் ஈடுபடுகின்றனர். கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மதிப்பளிப்பதில்லை. இன்றைய மாணவர்கள் இரவு முழுவதும் கண்விழித்து படிக்கும் நேரத்தைவிட கண்விழித்து திறன்பேசியில் கதைக்கும் நேரமே அதிகம். பெற்றோரிடம் செயலமர்வு என பொய் கூறிவிட்டு பாடசாலைச் சீருடையுடன் வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்று ஆட்கள் நடமாட்டம் இல்லாத இடத்தில் உடையை மாற்றிக்கொள்வர். பின் தம்மைவிட வயதில் கூடிய தவறான நண்பர்கள் வட்டாரத்துடன் சேர்ந்துகொண்டு குழுச்சண்டை, வாள்வெட்டு, களவு போன்ற கலாசார சீரழிவுகளில் ஈடுபடுகிறார்கள். ■



புதன்பொய்கைக்கு நீங்களும் எழுதலாம்

- கட்டுரைகள்
- கவிதைகள்
- விமர்சனங்கள்
- நூல் அறிமுகம்
- பதிவுகள்
- அறிவியல்
- கலைப்படைப்புகள்



அனுப்பவேண்டிய முகவரி:
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்பார்வை இழப்பு நட்டஈடு எங்கே?



## சுகாதாரத் தொழிற்சங்கக் கூட்டணி கேள்வி

**கொழும்பு, ஜுலை 17**

**தரம் குறைந்த மருந்துப் பொருள்களால் கண் பார்வையை இழந்தவர்களுக்கு இதுவரையில் நட்டஈடு வழங்கப்படவில்லை. அவர்களுக்கு நட்டஈடு வழங்குவதாக அரசாங்கம் உறுதியளித்த போதிலும் இதுவரையில் வழங்கப்படவில்லை என்று சுகாதாரத் தொழிற்சங்கக் கூட்டணி தெரிவித்துள்ளது.**

அரசாங்க மருத்துவமனையில், தரம் குறைந்த 'பிரிட்னிசிலோன்' என்ற மருந்து வகையை வழங்கியதனால் சிலர் கண் பார்வையை இழந்தமை பெரும் சர்ச்சையை உருவாக்கியிருந்தது.

இந்த மருந்தால் கண் பார்வையை இழந்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்குத் தேவையான மருந்துக்கு மருத்துவமனையில் தட்டுப்பாடாக உள்ளதாகக் கூறப்படுகிறது. அதனைத் தனியார் மருந்தகங்களில் கொள்வனவு செய்யும் போது பெருந்தொகை பணத்தை செலவிட நேரிடுகிறது. எனவே இழைக்கப்பட்ட அநீதிக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என்றும் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## மருத்துவர்...

வழக்கு விசாரணைகள் தொடர்பாக முகநூல் நேரலையிலையோ பதிவுகள் ஊடாகவோ கருத்துத் தெரிவிக்கக்கூடாது உள்ளிட்ட நிபந்தனைகளை விதித்தார்.

இதேவேளை - மருத்துவர் அர்ச்சுனா, குற்றம்சாட்டிய மற்றைய மருத்துவர்கள் தொடர்பாக ஆதாரங்களுடன் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று வாக்குமூலங்களை வழங்குமாறும், பொலிஸ் நிலையத்துக்குச் சென்று வாக்குமூலம் அளிக்கத் தவறினாலோ அல்லது ஆதாரங்களைச் சமர்ப்பிக்கத் தவறினாலோ அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் பொலிஸாருக்கு நீதிவான் பணிப்புரை விடுத்தார்.

வழக்காளிகளான சட்டமருத்துவ அதிகாரி பிரணவன், மருத்துவர்களான இந்திரகுமார், ரஜீவ், கமலா ஜெகூ ஆகியோரின் சார்பில், சட்டத்தரணிகளான திருக்குமரன், குருபரன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். மருத்துவர் அர்ச்சுனா தனது சார்பில் சட்டத்தரணிகளை நியமிக்கவில்லை.

கடமைக்கு இடையூறு விளைவித்தமை, அச்சுறுத்தல் விடுத்தமை மற்றும் நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளை மீறியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் மருத்துவர் அர்ச்சுனாவுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (அ-ம-26-125-27-66)

## விபத்தில்...

வவுனியாவைச் சேர்ந்த ராகுல் கமிது இக்லாத் (வயது - 37) எனும் நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

மேற்படி நபர் கடந்த 11ஆம் திகதி மன்னாருக்கு மோட்டார்சைக்கிளில் சென்ற போது எதிர்த் திசையால் வந்த மோட்டார் சைக்கிள் அவரை மோதித் தள்ளியுள்ளது.

இதையடுத்து படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்தார்.

விசாரணையில் விபத்தை ஏற்படுத்திய மோட்டார்சைக்கிளைச் செலுத்தியவர்கள் 14 வயதுடையவர்கள் எனத் தெரிய வந்துள்ளது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## காய்ச்சலால்...

மணற்காடு - காரை நகர் பகுதியைச் சேர்ந்த சச்சிதானந்தன் சிவசிதம்பரநாதன் (வயது - 64) என்பவரே உயிரிழந்தவராவார். தனது தந்தையாரின் இறுதிச் சடங்குக்காக லண்டனில் இருந்து வந்த அவர், நேற்றுமுன் தினம் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளார். இதையடுத்து அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், நேற்று உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணை களை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## அநுராதபுரத்தில்...

அநுராதபுரம் வடக்கு பகுதியில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை மாலை 2.7 ரிக்டர் அளவுகோலில் இந்த நிலநடுக்கம் பதிவானது.

இதேவேளை - ஜுன் 18 ஆம் திகதி 2.3 அளவிலான நிலநடுக்கம் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## டிப்பர்...

இந்தத் துப்பாக்கிச் சூட்டில், டிப்பருக்குள் சாரதிக்கு உதவியாகப் பயணித்த நபர் காலில் காயமடைந்தார். அவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். டிப்பர் பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதுடன், மேலதிக நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-113)

# இ.போ.சபைக்கு 370 பேர் சேர்ப்பு

கொழும்பு, ஜுலை 17

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சாரதி மற்றும் நடத்துநர் பதவிகளுக்கு 370 பேர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தலைமையில் இடம்பெற்றது.

மேல்மாகாணத்தில் பத்து வருடங்களுக்கு மேலாகப் பணிபுரிந்து நீண்டகாலமாக விண்ணப்பித்துள்ள சாரதிகள் மற்றும் நடத்துநர்களை இடமாற்றம் செய்வதற்கு இந்த புதிய சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் காணிகள் விற்பனைக்குண்டு.**

- **A9 பாதைக்கு அருகாமையிலும், தண்ணீர்த்தாங்கிக்கு முன்பகுதியிலும், 11 அடி அகலப் பாதையுடன் 6 1/2, 5 பரப்புக் காணித்துண்டுகள் உண்டு.**
- **நன்னீர் ஊற்றுச் சூழலுடன் சகல வகையான விற்பனை நிலையங்களும், தொழில் நிலையங்களும் அருகாமையில் அமைந்துள்ளன**
- **தரகர் தொர்பு தேவையில்லை.**

தொடர்புகளுக்கு:

**077 318 8770, 076 653 3860**

## மரண அறிவித்தல்



**அமரர் கந்தையா குமாரசுவாமி**

யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகவும், உடுப்பிட்டி மற்றும் நல்லூர் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குமாரசுவாமி அவர்கள் 15.07.2024 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற கந்தையா, சின்னத்தங்கம் தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்ற நல்லம்மா (இளைப்பாறிய ஆசிரியை-உடுப்பிட்டி) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சண்முகநாதன், மீனாட்சி, ஆறுமுகம் ஆகியோரின் அன்புத் தம்பியும், உமாபாலன் (பிரித்தானியா), புவனேஸ்வரி (பிரித்தானியா), Dr. தயாளினி (யாழ்.போதனா வைத்தியசாலை), சங்கர் (பிரித்தானியா), Dr. திருமால் (கொழும்பு தேசிய வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், உமாதேவி (பிரித்தானியா), அசோகன் (பிரித்தானியா), Dr. சிவதாசன் (தெல்லிப்பழை வைத்தியசாலை) Dr. சுலோஜனா (பிரித்தானியா), Dr. சுதர்சினி (லேடிறிச்வே வைத்தியசாலை-கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிருந்தன், லக்ஷ்மன், சிந்தி வைதேகி, ஹறிகஜன், அரசன் செந்தூரன், தேவசாயினி, தர்மதாசன், தர்மசாயினி, பிரணவி, சங்கவி, நேகா, ஜித்தியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 18.07.2024 வியாழக்கிழமை அன்று மு.ப 11.00 மணியளவில் அவரது நல்லூர் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பி.ப 01.30 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

இல.33, [illegible] ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்

Dr. தயாளினி (லீனா)- மகள் +94 77 820 8884
Dr. திருமால் - மகன் +94 77 739 8612

(CS 957) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோவையம்பதி திருவருள் மிகு
# ஸ்ரீ பலானை கண்ணகை அம்மன் தேவஸ்தான
# 7ஆம் திருவிழா குழுவினரின்
# கைலாச வாகன வெள்ளோட்ட சுப முகூர்த்த பத்திரிகை
# 2024-07-17

**கண்ணகை அடியார்களே!**

நிகழும் மங்களகரமான குரோதி வருஷம் இன்று (17.07.2024) புதன்கிழமை ஆலயத்தின் 7ஆம் திருவிழா குழுவினரின் கைலாச வாகன வெள்ளோட்டம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது. அடியார்கள் ஆசார சீலர்களாக வருகை தந்து அம்மனின் அருளை பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக்கொள்கின்றோம்.

**கோவையாதீன குரு முதல்வரின் ஆசிச்செய்தி**



(கைலயங்கிரி காட்சி காணக் புண்ணியம் வேண்டும்) கோவையம்பதி பலானை கண்ணகை அம்பாளின் குரோதி வருட அலங்கார உற்சவம் பக்தி பூர்வமாக நடைபெற்று வருகின்றது.

இந்த வருட உற்சவத்திற்கு மேலும் மெருகூட்டுகின்ற வகையில் 7ம் திருவிழா உபயகாரர்களால் பெரும் முயற்சியினால் உள்நாட்டு வெளிநாட்டு உறவுகளின் பேராவினாலும் பெரும் முயற்சியினாலும் குலநாயகி கண்ணகை அம்பாளுக்கு புதிதாக கைலாச வாகனம் சிற்பாச்சாரி தியாகராஜா பிரதீபன் அவர்களால் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. குலநாயகி கண்ணகை அம்பாள் கைலாச வாகனத்தில் அமர்ந்து வீதியுலா வருகின்ற காட்சி திருக்கைலை காட்சி போன்று காண்பதற்கு ஆயிரம் கண்கள் வேண்டும். வெள்ளோட்டம் நடைபெறுகின்ற இன்றைய புனித நாளில் இந்த பெரும் தர்ம கைஙகரியத்தை ஆற்றிய 7ம் திருவிழா உபயகாரர்கள் வெளிநாட்டு அடியவர்கள் சிற்பாச்சாரி அம்பாளின் மீள அடியவப் பெருமக்கள் எல்லோருக்கும் கண்ணகை அம்பாளின் திருவருளும் குருவருளும் பரிபூர்ணமாக கிடைக்க நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து கொள்கின்றேன்.

**ஸ்தானிககுரு**
**சிவஸ்ரீ வை.மு.பரம சண்முகராஜ**
**சிவாச்சார்யார்**

**செஞ்சொற்செல்வரது**
**ஆசிச்செய்தி**

கோப்பாய் பலானை கண்ணகி அம்மன் திருக் கோவிலில் புதிய கைலாச வாகனம் உருவாக்கப்பட்டு வெள்ளோட்ட விழா நடைபெறுவதை அறிந்து ஆனந்த மடைகின்றேன்.

7ஆம் திருவிழா உபயகாரர்கள் தம் குலதெய்வத்திற்கு காணிக்கையாக இத் திருப்பணியை நிறைவேற்றி யுள்ளனர். கைலாய வாகனத்தை சிற்பக் கலைஞர் தியாகராஜா பிரதீபன் அவர்கள் மிகச் சிறப்பாக அமைத்துள்ளமை பாராட்டிற் குரியது.

மிகப் பழைமை வாய்ந்த எனது தந்தைவழிக் குல தெய்வமாகிய கண்ணகி அம்பாள் கைலாய வாகனத்தில் வரும் காட்சியை காணும்போது கிடைத்ததையிட்டு பெருமிதங் கொள்கின்றேன்.

**கலாநிதி ஆறுத்திருமுருகன்**
**தலைவர்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை.**

**ஆலயத் தலைவரின்**
**வாழ்த்துச் செய்தி**

கோப்பாய் பலானை கண்ணகை அம்பாள் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தில் 7ம் திருவிழா உபயகாரர்கள் அவர்களுடைய குழுவினர் கள் உறவுகள் வெளிநாடுகளில் இருக்கின்ற உறவுகளின் பெரும் முயற்சியினால் இந்த வருடம் புதிதாக கைலாச வாகனம் சிற்பாச்சாரி தியாகராஜா பிரதீபனால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இவர்களுடைய பெரும் முயற்சியினையும் பேரவாவையும் அம்பிகை பால் இவர்கள் கொண்டுள்ள அலவற்ற பக்தியையும் கண்டு அளவற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். எல்லாம் அம்பாளின் திருவருள் என்றே போற்ற வேண்டும். கைலாச வாகன வெள்ளோட்டம் நடைபெறுகின்ற இன்றைய நன்நாளில் 7 ம் திருவிழா உபயகாரர் களையும் சிற்பாச்சாரி தியாகராஜா பிரதீபன் அவர்களையும் பரிபாலன சபையினர் சார்பாக வாழ்த்துகின்றோம்.

**பேரின்பநாதன்**
**ஆலய பரிபாலன சபை தலைவர்.**

**7ஆம் திருவிழா உபயகுழுவினர் சார்பாக தலைவரின்**
**உள்ளத்திலிருந்து**

எமதுகுழுவினர் கடந்த பலவருடமாக எமது பலானை கண்ணகை அம்மன் தேவஸ்தானத்தில் 7ஆம் திருவிழா வருகிறோம். அந்த வகையில் எமது குழுவினர் சார்பாக எமது மக்கள் எல்லோருடைய பெரும் விருப்பினாலும் கண்ணகை அம்மனின் மெலான திருவருளினாலும் குரோதி வருட அலங்கார உற்சவத்திற்கு புதிதாக கைலாச வாகனம் சிற்பாச்சாரி தியாகராஜா பிரதிபன் அவர்களால் நிர்மாணயிக்கப்பட்டுள்ளது. எமது ஊரிலே இருக்கின்ற மக்கள் வெளிநாடுகளில் இருக்கின்ற எமது உறவுகள் எல்லோருடைய பெரும் முயற்சியால் அமைய பெற்ற கைலாச வாகனம் வெள்ளோட்டம் இன்றைய தினம் நடைபெறுவதை இட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.. இந்த பெரிய கைங்கரியத்துக்கு உதவிய அனைவருக்கும் 7ஆம் திருவிழா உபயகாரர்கள் சார்பாக நன்றியையும் தெரிவித்து கொள்கின்றோம்.

**இக்கைலாச வாகனம் கோப்பாய் கிராமத்தில் முதன்முதலில் அமையபெற்றதுடன்**
**எனக்கும் இதுவே முதலாவது கைலாச வாகனமாகவும் அமையபெற்றது. (தியாகராசா பிரதீபன்)**

இரும்பு வேலை
**செல்வரத்தினம்**
**அனுசீலன்**

அம்பாள் சிற்பாலயம்
**தியாகராசா பிரதீபன்**
**சிற்பகலா வித்தகன்**
**சிற்பகலாஜோதி**

வர்ண வேலை
**செல்வவதி ஓவியக் கலையகம்**
**அரசரத்தினம் அயந்தன்**

**கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் தேவஸ்தானம்**
**7ஆம் திருவிழா உபயகாரர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடிப்பிறப்புக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

உடுவில் பிரதேச செயலகமும் இணுவைத் தமிழ்ச் சங்கமும் இணைந்து நடத்தும் ஆடிப்பிறப்பு விழா ஆடிப்பிறப்பு நாளான இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இணுவைத் தமிழ்ச் சங்கத் தலைவர் ச.முகுந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் உடுவில் பிரதேச செயலர் பாலசுந்தரம் ஜெயகரன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

****************

கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் நிதி அனுசரணையுடன் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகம் நடத்தும் ஆடிப்பிறப்பு நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நவாலி வடக்குப் பொதுநோக்கு மண்டபத்தில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலாளர் திருமதி சுபாஜினி மதியழகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலக சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி வி.சுகுணலிணி, சமூக சேவகர் க.செல்வகுமாரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

****************

வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையில் கோப்பாய்ப் பிரதேச செயலகமும் பண்பாட்டுப் பேரவையும் இணைந்து நடத்தும் ஆடிப்பிறப்புப் பெருவிழா இன்று முற்பகல் 11 மணியளவில் கோப்பாய்ப் பிரதேச செயலகத்தின் புதிய மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன் பிரதமவிருந்தினராகக்கலந்துகொள்ளவுள்ளார்.

****************

வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் யாழ். மாவட்டச் செயலக நலன்புரிக் கழகமும் இணைந்து நடத்தும் ஆடிப்பிறப்பு விழா இன்று காலை 9 மணியளவில் யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் மாவட்டச் செயலக நலன்புரிக் கழகத்தலைவர் உ.தர்ஷினி தலைமையில் நடைபெறவுள்ளது.

(ம-66)

## சீன நன்கொடை அரிசி கிளிநொச்சி வந்தடைவு



கிளிநொச்சி, ஜூலை 17

இலங்கைக்கு சீன அரசாங்கம் நன்கொடையாக வழங்கிய அரிசி இரண்டு கொள்கலன்கள் கனரக வாகனமொன்றில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்டத்தை வந்தடைந்தது. இந்த அரிசி கடற்றொழில் திணைக்களம் ஊடக 2,978 கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு விநியோகம் செய்யப்படவுள்ளது. எதிர்வரும் நாள்களில் பளை, கண்டாவளை, பூநகரி, நாச்சிக்குடா ஆகிய நான்கு கடற்றொழில் அலுவலகங்களினூடக இந்த அரிசி விநியோகம் செய்யப் படவுள்ளது.

(ச-113)


## வேலையாள் தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் வியாபார நிலையத்திற்கு பெண்பணியாளர் தேவை. விற்பனை அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. ஆர்வமுள்ளோர் உடன் தொடர்பு கொள்ளவும். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:

**077 635 4224**

## A/L பௌதிகவியல்

**Personal Classes**

**2026 Batch**

Mr. S. Kumar BSc (Hons) PGDE

**T.P : 077 117 0971**


## கண்ணீர் அஞ்சலி

மலர்வு 24 . 03 . 1949



உதிர்வு 15 . 07 . 2024

**அமரர் கலாபூஷணம் K.V.குணசேகரம்**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

லங்கா புத்தகசாலை (பிறைவட் லிமிட்டட்)-கொழும்பு
ஸ்ரீ லங்கா புத்தகசாலை-யாழ்ப்பாணம்.

(CS 948) V-1

## பெயர் மாற்றம்

டச்சு வீதி, சித்தன்கேணியில் வசிக்கும் **தயாளன் சுரேந்திரன்** ஆகிய நான் எனது பெயரை **தயாளன் தயாசுரேந்திரன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **தயாளன் தயாசுரேந்திரன்** என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**தயாளன் தயாசுரேந்திரன்**

(CS/55680) J-1


## வேலைக்கு ஆட்கள் தேவை

- யாழ். நகரில் உள்ள பிரபல்மான புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.
- மேலும் பில் கிளாக் (சிட்டை எழுதுநர்) ஆண், பெண் இரு பாலாரும் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:

**077 748 8093, 077 473 0895**

(CR 42832) V-1


## காணி தொடர்பான அறிவித்தல்

அச்சுவேலி, பருத்தித்துறை வீதியில் இலங்கை வங்கிக்கு அருகாமையில் (கொத்திக்கலட்டி) 4 பரப்பு விஸ்தீரணம் கொண்ட காலஞ்சென்ற சட்டத்தரணி கே.எஸ்.பாலகிருஸ்ணனுக்கு சொந்தமான காணி தொடர்பில் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் காணி/1142/23 என்ற இலக்க வழக்கு நடைபெற்று வருவதனால் அக்காணியை உடமை கொள்ளவோ அல்லது கொள்வனவு செய்யவேண்டாம் என இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தரப்படுகின்றது.

தகவல்:
வழக்காளிகளின் அற்றோனித்தத்துவக்காரர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 06 . 1941



மறைவு 15 . 07 . 2024

**நாகமுத்து ஸ்ரீதரன்**

(ஓய்வுபெற்ற விமானப்படை உத்தியோகத்தர் -
Air Force Warrant Officer)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து ஸ்ரீதரன் நேற்றுமுன்தினம் (15.07.2024) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - மாணிக்கம் தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர்களான இராசையா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சுமித்திராவின் பாசமிகு கணவரும், சதீஸ்குமார், நரேஸ்குமார், ஸ்ரீதர்சினி, சனித் ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜிதா, ஜெக்குலின், ரமேஸ், சச்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும், சந்தோஷ், றித்திக்கா, நிசா, றோகித், ரஸ்னா, ஆதித்ய ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான கமலாதேவி, கௌசலாதேவி, சந்திராதேவி ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்ற கருணாவதி மற்றும் ரஞ்சினி, சாரதாதேவி, உதயகுமார், சிவகுமார், பாலசுந்தரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.07.2024) வியாழக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் நீர்கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்கொழும்பு பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

சதீஸ் - 077 905 0114
நரேஸ் - 077 654 3501
ஸ்ரீதர்சினி - 045 223 55093

இல: 30/10 பினான்ஸ் தோட்டம்,
தொப்பு, கொச்சிக்கடை,
நீர்கொழும்பு.

(CS/55684) J-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 2 கிறிஸ்தவ...

அருட்தந்தையர்கள் ஒழுக்காற்று நடவடிக்கை காரணமாகப் பணியிடை நிறுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அவர்கள் இருவரும் எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்கு ஆலயங்களில் திருப்பலிகளை நிறைவேற்றுவதற்கும், பங்குப் பணிமனைகளைப் பயன்படுத்துவதற்கும், குருக்களுக்கான சிறப்புச் சலுகைகளைப் பயன்படுத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## நல்லூரர்த்...

அதிகாரி பணிமனையின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

மேற்படி கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்களாவன,

நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு, அடுத்தமாதம் 7ஆம் திகதி நள்ளிரவு தொடக்கம் செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி நள்ளிரவு வரை ஆலய வெளிவீதியின் ஊடான போக்குவரத்துகள் முற்றாகத் தடை செய்யப்பட்டிருக்கும். பருத்தித்துறை வீதியில் மாநகரசபைக்கு முன்புறம் அரசடிச்சந்தி, கோயில் வீதியில் சங்கிலியன் வீதி சந்தி, பிராமணக்கட்டுகுள வீதிச் சந்தி போன்ற இடங்களில் பிரதான வீதித்தடைகள் அமைக்கப்பட்டிருக்கும். சுகாதாரப் பாதுகாப்புத் தேவைகளிற்கேற்ப மேற்படி வீதித் தடைகளின் அமைவுகளில் மாற்றங்கள் ஏற்படலாம்.

வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ்.மாநகரசபைக்கு முன்னால் உள்ள குறுக்கு வீதியால் பயணித்து நாவலர் வீதி ஊடாக ஆனைப்பந்திச் சந்தி வழியாக யாழ். நகரை அடைய முடியும். யாழ். நகரிலிருந்து திரும்பும் வாகனங்கள் அதே பாதை ஊடாக பருத்தித்துறை வீதியை அடைய முடியும். விசேடபெருந்திருவிழாக்களின் போது நல்லூர் முத்திரைச் சந்தியில் திரும்பிக் கச்சேரி - நல்லூர் வீதி ஊடாக நாவலர் வீதியை அடைந்து பயணிக்க முடியும். கோயில் வீதி வழியாக வரும் வாகனங்கள் சங்கிலியன் வீதியூடாக பருத்தித்துறை வீதியை அடைந்தும், செட்டித்தெரு ஒழுங்கையூடாகப் பருத்தித்துறை வீதியை அடைந்தும் பயணிக்க முடியும். தூக்குக் காவடிகள் பருத்தித்துறை வீதி வழியாக உள்நுழைந்து ஸ்ரீமுருகன் தண்ணீர்ப் பந்தலில் காவடிகள் இறக்கிவிட்டு உழவியந்திரங்கள் செட்டித் தெரு வீதியூடாக வெளியேற வேண்டும்.

யாழ்.மாநகரசபையால் ஆலய வீதிச் சூழலில் வீதித் தடைகளுக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கும், வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கும் வாகன அனுமதி அட்டை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நிரந்தர வியாபாரிகள் பொருட்களை ஏற்றி இறக்க விசேட நேரக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. உற்சவ காலங்களில், சிறுவர்களைப் பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுதல், ஆலய வெளி வீதிச் சூழலில் வியாபார, விளம்பர மற்றும் ஒளிபரப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், ஆலயச் சூழலில் பொலிதீன் பாவனை, ஆலய வெளி வீதிச் சூழலில் காலணிகளுடன் நடமாடுதல், பக்தி கீதங்கள் தவிர்ந்த ஏனைய பாடல்களை ஒலிபரப்புச் செய்தல், கடவுள் திருவுருவப்படங்களுடனான விளம்பரங்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல், ட்ரோன் கமராக்களைப் பயன்படுத்திக் காணொலிகளைப் பதிவு செய்தல் போன்ற செயற்பாடுகள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேற்குறித்த நடவடிக்கைகளுக்கு அமைவாக நல்லூர்ப் பெருந்திருவிழா நடைபெறுவதற்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு யாழ். மாநகரசபையின் ஆணையாளர் ச.கிருஸ்ணேந்திரன் தெரிவித்துள்ளார். (அ-ம-25-66)

## பொருட்கள்...

காஞ்சன விஜயசேகர வர்த்தக சமூகத்திடம் கேட்டுக்கொண்டார்.

மின்சாரம் மற்றும் எரிபொருளின் விலைகளை மிகப்பெரியளவில் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இருப்பினும் இந்த நாட்டில் பொருட்கள் மற்றும் சேவைக் கட்டணக் குறைப்பின் பலன் இன்னும் நுகர்வோருக்கு கிடைக்கவில்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் விஜயசேகர இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, ஏப்ரல், ஜூலை, ஒக்ரோபர் மாதங்களில் மின் கட்டணம் திருத்தப்பட வேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது. மின் கட்டணக் குறைப்புக்கு பல முக்கியமான காரணங்கள் உள்ளன. 2022ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால், கடந்த காலங்களில் வங்கி வட்டி விகிதம் 36 சதவீதம் வரை அதிகரித்தது. ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே போர் நிலவி வருவதால், நிலக்கரி மற்றும் உலை எண்ணெய் விலையும் அதிகரித்தது. அமெரிக்க டொலருக்குச் செலுத்தவேண்டிய தொகை அதிரடியாக உயர்ந்தது. இதன்படி, 2014 ஆம் ஆண்டுக்குப் பின்னர், 2022ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் மின் கட்டணம் திருத்தப்பட்டது.

கடந்த இரண்டு வருடங்களைப் பொறுத்தவரை, மழை வீழ்ச்சியும் அதிகரித்துள்ளது. அதனால், நீர் மின் உற்பத்தி அதிகரித்தது. மேலும், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தியும் அதிகரித்துள்ளது. கடந்த ஏப்ரல் மாதம், உமா ஓயா நீர்மின் நிலையத்தின் மின்சாரம் தேசிய உற்பத்திக் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டது. கடந்த 18 மாதங்களில், இலங்கை மின்சாரசபை செயற்பாட்டுச் செலவுகளைக் குறைத்துள்ளது. கடந்த இரண்டு வருடங்களில் இலங்கை மின்சாரசபைக்கு எந்த ஒரு ஊழியரும் புதிதாக இணைத்துக் கொள்ளப்படவில்லை. தேவைப்பாடுள்ள 26 ஆயிரம் ஊழியர்களுக்குப் பதிலாக, இன்று 22 ஆயிரம் ஊழியர்கள் மாத்திரமே உள்ளனர். மேலும், செயற்பாட்டுச் செலவுகளைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்க முடிந்தது. குறைந்தளவு மின்சாரம் பயன்படுத்தும் மக்களுக்கு இந்த மின் திருத்தத்தின் மூலம் அதிக நிவாரணம் கிடைத்துள்ளது - என்றார். (அ-ஓ-இ)

## மூடப்பட்டது...

கடந்த 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதியன்று, முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பினைப் பொருத்துவதற்காக, கனரக இயந்திரத்தின் மூலம் நிலத்தினை அகழ்ந்தபோது மனிதப் புதைகுழியொன்று இனங்காணப்பட்டிருந்தது.

இதனையடுத்து முல்லைத்தீவு நீதிமன்றம், முல்லைத்தீவு சட்டமருத்துவ அதிகாரி ஆகியோரின் கண்காணிப்பு மற்றும் பங்குபற்றுதல்களுடன், தொல்லியல் துறைப் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் அந்த மனிதப்புதைகுழியில் இரண்டு கட்டங்களாக அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் கடந்த 4ஆம் திகதி ஆரம்பமான நிலையில் நேற்றுமுன்தினத்துடன் அகழ்வுப் பணிகள் முடிவுக்கு வந்திருந்தன.

இந்த நிலையில், நேற்றையதினம் கண்காணிப்புக்கு மத்தியில் இதுவரை அகழப்பட்ட பகுதியில் அடையாளமிடப்பட்டு புதைகுழி மூடப்பட்டது. மீட்கப்பட்ட மனித எச்சங்கள், சட்ட மருத்துவ அதிகாரி க. வாசுதேவா, பேராசிரியர் ராஜ் சோமதேவா, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி நிறஞ்சன், நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன், கொக்கிளாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் முன்னிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டன.

இன்னும் ஒருசில தினங்களில், காணாமலாக்கப்பட்டவர்கள் பணியகத்தினைச் சேர்ந்த அதிகாரிகள் புதைகுழியைப் பார்வையிட்டதும் புதைகுழியை நிரந்தரமாக மூடப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-19)

## ஜூலை...

1976 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக தேர்தல் திணைக்களத்திலும் பின்னர் ஆணைக்குழுவிலும் கடமையாற்றிக் கிட்டத்தட்ட 15 முதல் 20க்கும் மேற்பட்ட தேர்தல்களை நடத்தியுள்ள போதிலும் இதுபோன்றதொரு சூழலை நான் இதற்கு முன்னர் கண்டதில்லை.

அரசமைப்பின் பிரகாரம் செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி முதல் ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதிக்கு இடைப்பட்ட ஒரு நாளில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டமெனவும். தேர்தலுடன் தொடர்புடைய அனைத்துச் செயற்பாடுகள் குறித்தும் கவனம் செலுத்தி அதன் அடிப்படையிலேயே தேர்தலுக்கான தினம் அறிவிக்கப்படும்.

அரசமைப்பு மற்றும் ஜனாதிபதித் தேர்தல் சட்டங்களுக்கு அமைய மாத்திரமே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் திகதி தீர்மானிக்கப்படும். வேறு எந்தவொரு காரணிகளும் இந்த விடயத்தில் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

2024 ஆம் ஆண்டுக்காக பிரதான வாக்காளர் இடாப்பு மற்றும் புதிய வாக்காளர்களின் விவரங்கள் அடங்கிய வாக்காளர் இடாப்பு ஆகியன தயாரிக்கப்பட்டுள்ளன. இம்முறை ஒரு கோடியே, 71 இலட்சத்து, 40 ஆயிரம் வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதுக்கு உரிய அரச நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (அ-ம-66-44)

## அதிபர்கள்...

இதன்படி, எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை முதல் தொடர்ச்சியாக இரண்டு வாரங்கள் சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ள உள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த இரண்டு வார காலப் பகுதியிலும் கல்வித்துறையில் கற்பித்தல் சேவையை மாத்திரமே நாங்கள் மேற்கொள்வோம். வலயக் கல்வி அலுவலகங்கள், மாகாணக் கல்வி அலுவலகங்கள், மாகாணக் கல்வி அமைச்சு, கல்வி அமைச்சு ஆகியவற்றால் நடத்தப்படும் செயலமர்வுகள், கூட்டங்கள், செயற்பாடுகள் எதிலும் நாங்கள் பங்குபெறமாட்டோம். எனவே, இருவார காலத்திலும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு எந்தவிதப் பாதிப்புகளும் இல்லாதவாறு சட்டப்படி வேலை நடவடிக்கைகளை மாத்திரமே மேற்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளோம். எங்களுக்குச் சரியானதொரு தீர்வு கிடைக்காதுவிடில் நாங்கள் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்பதையும் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றார். (அ-ம-66-26)

**பணியாளர்கள் தேவை**
நிறுவனம் ஒன்றுக்கு
விற்பனை பிரதிநிதி: (50000+ ஊக்குவிப்பு தொகை) (அனுபவம் வாய்ந்தவர்).
இடம்: யாழ்ப்பாணம், வவுனியா
சாரதி: Light Vehicles
தொடர்புகளுக்கு:
077 153 1167

**வேலையாட்கள் தேவை**
யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையில் உள்ள பிரபல ஹொட்டல் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
- வரவேற்பாளர் (Receptionist)
- துப்புரவு பணியாளர் (Room Cleaners)
- விற்பனைப் பிரதிநிதி (Sales Rep)
(Driving License வைத்திருப்பவர்கள் விரும்பத்தக்கது)
- DRIVER
- Electrician
- Kitchen Helper
- Waiter
- Room Boy
- House Keeping

25- 35 வயதிற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு:- 076 012 0283
(CS/55687) J-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு உறுதிப்படுத்த ‘1989’

வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையங்களை நாடும் முன்னதாக அவை பதிவு செய்யப்பட்டுள்ளனவா? என்பதை உறுதிப்படுத்துமாறு மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. ‘1989’ என்ற துரித தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தியும் பணியகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் ஊடாகவும் குறித்த தகவல்களை பெற்றுக் கொள்ளலாம் என்றும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அறிவுறுத்தியுள்ளது.

(ச-இ)


## முழுநேர / பகுதிநேர வேலைவாய்ப்பு

**இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**அடிப்படைத் தகைமைகள்**

- ✓ G.C.E (O/L) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- ✓ 18 - 60 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக்கோவையை (BIO DATA) கீழ்வரும் Whatsapp இலக்கத்துக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Whatsapp 077 756 3781

jenyjude77@yahoo.com

(CS/55682) J-1


## மரண அறிவித்தல்



தோற்றம் 07.11.1954 — மறைவு 13.07.2024

### பொன்னுத்துரை சுப்பிரமணியம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சுப்பிரமணியம் கடந்த (13.07.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - இரத்தினம் தம்பதியரின் பாசமிகு மகனும், மல்லாகத்தைச் சேர்ந்த சண்முகசாமி - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், தயாளினியின் அன்புக் கணவரும், தனேந்திரன் (கனடா), கிருபாகரன் (கனடா), நிரோஜன், திவ்யா ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகதர்சினி (கனடா), எழில்செல்வி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், மிஷாத், ஞவீன், அனோஸி, லக்ஷன், லதுர்ஷன், கபிஷன் ஆகியோரின் அன்பு அப்பப்பாவும், சரஸ்வதி, தெய்வேந்திரம், நாகேந்திரன், மகேந்திரன் காலஞ்சென்ற சுரேந்திரன் மற்றும் ஜெகசோதி காலஞ்சென்ற பாலேந்திரன், உதயகுமார், விஜயகுமார் ஆகியோரின் சகோதரனும், குணராஜா, ராணிதேவி, இரட்ணேஸ்வரி, மனோரஞ்சினி, நாகேந்திரமூர்த்தி, சிவகங்கா, செல்வரதி ஆகியோரின் அன்பு மைத்துனனும், நந்தினி (கனடா), காலஞ்சென்ற குமிதினி மற்றும் ரோகினி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.07.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**076 742 4890**

புகையிரத வீதி,
மல்லாகம்.

(CS/55685) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 08 . 1943 — மறைவு 14 . 07 . 2024



### சின்னத்துரை தணிகாசலம்

(சுமன் லொஜ் - கொழும்பு)

யாழ். இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், இணுவில், கொழும்பு, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை தணிகாசலம் கடந்த (14.07.2024) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி - சுபத்திராதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற செல்லையா - சின்னத்தங்கச்சி தம்பதியரின் பெறாமகனும், காலஞ்சென்ற தேவராசா அவர்களின் பாசமிகு சகோதரரும், ஞானேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும், சுமன், ருஷியந்தி, பிரசாந்தி, கிருசாந்தி, ஜதுசன், ஜதீசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிஷோகுமார், பிராப்தன், ஜெனகன், பிரவீனா ஆகியோரின் அன்பு மாமாவும், அரிஸ், டிஷானி, நிரீஸ், நிஸா, அர்ஜீன், தருண், நிதூஷன், சுவீன், சக்தி, சியோன் ஆகியோரின் அன்புப் பேரனும், நாகேஸ்வரன் (கனடா), ஜெகதீஸ்வரி (டென்மார்க்), சிவனேஸ்வரன் (இலங்கை), கலாவதி (சுவிஸ்), விக்னேஸ்வரி (கனடா), விக்னேஸ்வரன் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சகுந்தலாதேவி (கனடா), காலஞ்சென்றவர்களான யோகேந்திரன், குலசெல்வராணி மற்றும் பவளகாந்தன் (சுவிஸ்), பரம்தில்லைராஜா (கனடா), கௌரி (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகலனும், லேகா, யசோ, திபிகா, சுகீஸன், விதுஷா, அபிநயா, அபிநா ஆகியோரின் அன்பு மாமனாரும், தனுசா, சுவேதினி ஆகியோரின் அன்புச் சிறியதந்தையும், பவநீதன், பவித்திரா, ஜதர்ஷன் ஆகியோரின் அன்புப் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.07.2024) வியாழக்கிழமை நண்பகல் 12:00 மணியளவில் நடைபெற்று தாவடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
சுமன் - மகன் : +14163050559
+94741540953
ருஷியந்தி மகள் : +94775421956

(CS/ 55681) J-1

**தகவல்:**
**குடும்பத்தினர்**

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம் : advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.07. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org